# இஸ்லாத்தை விளங்கிக் கொள்ளல்:
# ஓர் அணுகுமுறை

ஷஹீத் கலாநிதி அலி சரிஅத்தி

# இஸ்லாத்தை விளங்கிக் கொள்ளல்: ஓர் அணுகுமுறை

(ஷஹீத் கலாநிதி (டொக்டர்) அலி ஷரிஅத்தி)

இஸ்லாமியக் கல்வித் தொடர் - (1)

**இஸ்லாத்தினை விளங்கிக் கொள்ளல்: ஓர் அணுகுமுறை**

கலாநிதி அலி ஷரிஅத்தி

தமிழாக்கம்: அபூ நஜாத்

வெளியீடு : இஸ்லாமியக் கல்வி நிலையம்,
39, அல்பட் பிளேஸ்,
தெஹிவல.
இலங்கை.

அச்சு : கிரஸன்ட் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடட்
90, ஜஸ்டிஸ் அக்பர் மாவத்த,
கொழும்பு-02.

முதற்பதிப்பு: 1988
பிரதிகள் : 3000
விலை : ரூ. 15.00

Islamic Study Series - 1.

**AN APPROCH TO THE UNDERSTANDING OF ISLAM**

By: Dr. Ali Shariati
Translated by: Abu Najath

Published by : Islamic Study Centre,
39, Albert Place,
Dehiwala,
Sri Lanka.

Printed by : Crescent Publications (Pvt) Ltd.
90, Justice Akbar Mawatha,
Colombo-2.

First Edition : 1988
No of copies : 3000
Price : Rs. 15.00
All Right Reserved

அருளாளனும், அன்புடையோனுமாகிய
அல்லாஹ்வின் திருநாமத்தால்........

بسم الله الرحمن الرحيم

## முன்னுரை

ஷஹீத் டொக்டர் அலி ஷரியத்தி அவர்கள் 1968ம் ஆண்டு தெஹ்ரான் ஹுசைனியா இர்ஷாத் நிலையத்தில் நிகழ்த்திய உரைகளின் தமிழாக்கமே இச் சிறு நூலாக வெளிவருகின்றது. இவ்வுரைகளில் அவர் இஸ்லாத்தினை விளங்கிக் கொள்வதற்கான ஒரு புதிய அணுகுமுறையினை எங்களுக்கு அறிமுகம் செய்கின்றார்.

டொக்டர் அலி ஷரிஅத்தி பிரபலமான ஒரு சிந்தனைவாதி; தத்துவஞானி; பேச்சாளர். டொக்டர் ஷரிஅத்தி சொல்லாட்சி மிக்கவர். கருத்துச் செறிவு மிக்க இவரது உரைகள் ஈரானிலும், அல்ஜீரியா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் மிகப் பிரபலம் வாய்ந்திருந்தன. தமக்கேயுரிய பாணியில் அவர் எம்மை ஒரு சரியான அணுகுமுறைக்கு இட்டுச் செல்கின்றார்.

நாம் எந்தவொரு பணியை ஆரம்பிக்கும் போதும் எமக்கு அதனுடனான தக அமைவு, அதன் போக்கு, அதன் அணுகுமுறை என்பன வேண்டற்பாலன. இஸ்லாத்தைப் புரிந்துகொள்ளலில் அறிமுகமாகும் ஓர் அணுகுமுறையானது எந்தவொரு நிலைப்பாட்டிலும் இஸ்லாத்தின் அடிப்படையிலேயே அமைந்திருக்க வேண்டும். இஸ்லாம் ஒரு பல்பரிமாண மார்க்கமாகும். ஆதலால் ஒவ்வொரு பரிமாணத்திலும் அவ்வணுகுமுறை இஸ்லாத்தினை அடியொற்றியதாகவே அமைய வேண்டும். இப்படியானதோர் அணுகுமுறையினை டொக்டர் அலி ஷரிஅத்தி ஒரு மாதிரியியல் (Typology) என்கின்றார்.

இஸ்லாத்தினை விளங்கிக் கொள்ளலில் அவர் பின்வரும் ஐந்து படித்தரங்களை முன் வைக்கின்றார். முதலாவது அல்லாஹ்வினை அறிதல். இரண்டாவது அல் குர்ஆனை அறிதல். மூன்றாவது அதன் தூதரை (ஸல்) அறிதல். நான்காவது நபித்துவப் பணியின் போக்கினை அறிதல். ஐந்தாவது இம்மார்க்கத்தினால் பயிற்றுவிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற மனிதர்களை அறிதல்.

மேற்படி ஐந்து படித்தரங்களையும் இஸ்லாத்திற்கு மட்டு மன்றி வேறு மார்க்கங்களுக்கும், சிந்தனைப் பிரிவுகளுக்கும் உப யோகிக்கும் வழிமுறைகளையும் அவர் சொல்லித் தருகின்றார். ஒப்பீட்டு ரீதியில் மார்க்கங்களை அறிய முற்படுபவர்கட்கு இது உதவும் என நம்புகின்றோம்.

மேலும் அவர் சமூக மாற்றங்களுக்கு அடிப்படைக் காரணி களாக பிரசித்தி பெற்றவர் (Personality), நியதி (Tradition), தற்செயல் (Accident), வெகுஜனம் (Mass) என்ற நான்கையும் குறிப்பிடுகின்றார். இக் காரணிகளினால் மாற்றமடைந்த சமூகங் களினை உதாரணமாகவும் குறிப்பிடுகின்றார். உலகின் நாகரீக வளர்ச்சிகளுக்கான அடிப்படைக் காரணத்தையும் விளக்கு கின்றார்.

சமூகவியலாளராக, தத்துவ ஞானியாக, மார்க்க மேதை யாக, புரட்சியாளராக விளங்கிய டொக்டர் அலி ஷரிஅத்தி அவர்கள் முன்வைக்கும் இவ்வணுகுமுறையானது தற்கால விஞ் ஞான உலகிற்கு மிகவும் அவசியமானதொன்றாக அமைகின்றது. உலகில் ஏற்பட்டு வரும் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்குச் சமாந்தர மாக தமிழ் வாசகர்களையும் இட்டுச் செல்லும் நோக்கிலேயே இப் புத்தகத்தினை வெளியிடுகின்றோம்.

இச் சிறு நூல் தமிழ் கூறும் நல்லுலகிற்கு இஸ்லாத்தினை விளங்கிக் கொள்வதில் ஒரு சிறிய உதவியினையாவது வழங்கு மாயின் நாம் மிகவும் உற்சாகமடைவோம். அல்லாஹ் எமது முயற்சியினை அங்கீகரித்து அருள் பாலிப்பானாக!

வாசகர்களின் கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**இஸ்லாமியக் கல்வி நிலையம்**

## ஷஹீத் டொக்டர் அலி ஷரிஅத்தி அவர்களின் வாழ்க்கைக் குறிப்பு

டொக்டர் அலி ஷரிஅத்தி அவர்கள் 1932ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஈரானின் கொரஷான் பாலைவனக் கிராமமான மாஸினனில் பிறந்தார்கள்.

அவரது தந்தையார் பேராசிரியர் முஹம்மத் தக்கி ஷரிஅத்தி அவர்களாகும். பேராசிரியர் தக்கி நவீன இஸ்லாமியப் புரட்சி நிலையத்தின் ஸ்தாபகர்களில் ஒருவர். டொக்டர் அலி ஷரிஅத்தியின் முதலாவது ஆசிரியர் அவரது தந்தையாரேயாகும்.

பாடசாலை வாழ்க்கையின் பின்னர் டொக்டர் அலி ஷரிஅத்தி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர்ந்து பயின்று ஆசிரியராகத் தொழில் புரிந்தார். பின்னர் சர்வகலாசாலையில் பயின்று பாரசீக இலக்கியத்தில் கலைமாணி (B. A.) பட்டம் பெற்றார்.

அலி ஷரிஅத்தி அவர்கள் தமது தந்தையாருடன் சேர்ந்து இளமைப் பருவத்திலேயே அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அது இரண்டாவது மகாயுத்த காலம். இவர் அப்போது பாடசாலையில் உயர்வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். அக் காலத்திலேயே தம் தந்தையாரால் ஆரம்பிக்கப்பட்ட இஸ்லாமியப் புரட்சி நிலையத்தின் பிரசுரப் பிரிவில் இணைந்து அரசியல் நடவடிக்கைகளுடன் தம்மையும் இணைத்துக் கொண்டார்.

1953ல் டொக்டர் முஸாதிக்கி அரசாங்கம் சி. ஐ. ஏ. யின் சதியினல் கவிழ்க்கப்பட்டது. டொக்டர் முஸாதிக் கொல்லப்பட்டார். மீண்டும் மன்னராட்சி அங்கு ஸ்தாபிக்கப்பட்டது. அக் காலங்களில் காலஞ்சென்ற ஆயத்துல்லாஹ் கஷிகானி போன்ற அறிஞர்கள் தேசிய எதிர்ப்பு இயக்கம் ஒன்றினைத் தோற்றுவித்தனர். இளைஞரான அலி ஷரிஅத்தி இத் தேசிய எதிர்ப்பு இயக்கத்தில் சேர்ந்து போராட்டங்களில் ஈடுபடலானார்.

எதிர்ப்பு இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக இவர் இஸ்ரவேலிய மொசாட்டின் துணையுடன் மன்னர் ஷாவினால் ஆரம்பிக்கப்பட்ட சவாக் இரகசியப் படையினால் கைது செய்யப் பட்டு சிறையிடப்பட்டார். சிறையில் தொடர்ச்சியாக எட்டு மாதங்கள் மிருகத்தனமான சித்திரவதைகளுக்குள்ளானார்.

பல்கலைக் கழகத்தில் இவரது திறமையைக் கண்ட விரிவுரை யாளர்கள் இவருக்கு வெளிநாட்டுப் புலமைப் பரிசில் ஒன்றை வழங்கினார்கள். ஆனால் பஹ்லவி ஆட்சியோ இவரைப் போக விடாமல் பல இடையூறுகள் செய்தது. இறுதியில் இவர் உயர் கல்விக்காக பிரான்ஸ் பயணமானார்.

பிரான்ஸில் கல்வி கற்கும் போது கூட இவர் ஓயவில்லை. ஷாவுக்கெதிரான இயக்கத்தில் அங்கும் சேர்ந்து கொண்டார். மேலும் ஷாவுக்கெதிரான இயக்கத்தினை ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் வளர்க்க அரும்பாடு பட்டார். அங்கு பல கூட்டங்களில் பேசினார்; தொடர்ந்து எழுதினார். அவரது பேச்சும், பேனையும் பிரபல்யமடைந்தன. சர்வதேச இஸ்லாமிய இயக்கத்திற்கு இதன் மூலம் தொண்டாற்றும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. விசேஷமாக அல் ஜீரிய விடுதலை முன்னணிக்கு அவர் அதிக பங்களிப்புச் செய்தார்.

பிரான்ஸில் இருக்கும் போது உலகின் சிறந்த சிந்தனவாதி களான பிரான்ஸ் பெனொன், ஹுரி பூமெதியான், பென் பெல்லா ஆகியோருடன் நன்கு பரிச்சயமானார். பிரான்ஸில் ஐந்து வருடக் கல்வியின் பின் சமூகவியல், இஸ்லாமிய சரித்திரம் எனும் துறைகளில் கலாநிதிப்பட்டம் பெற்று தாயகம் திரும்பினார்.

ஈரானுக்கு திரும்பி வருகையில் எல்லையில் மீண்டும் சவாக்கினால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். ஆனாலும் இச்செயலை மக்கள் கண்டித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தினர். மக்களின் தொடர்ச்சியான எதிர்ப்பினால் அப்போதைய ஷாவின் பிரதமர் ஹுவைதாவினால் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

அலி ஷரிஅத்தி அவர்கள் ஒரு கலாநிதிப் பட்டதாரியாக இருந்த போதிலும் கூட அவருக்கு சாதாரண ஆசிரியத் தொழிலே கிடைத்தது. மஷ்ஹத் நகருக்கு அண்மையிலுள்ள

ஒரு சிறிய பட்டினத்தின் பாடசாலையொன்றின் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆனாலும் இவரது சேவையைப் பெற்றுக் கொள்ள மஷ்ஹத் பல்கலைக் கழகம் அரசைத் தூண்டிக் கொண்டே இருந்தது.

பின்னர் அவர் மஷ்ஹத் பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். இப் பதவியானது இஸ்லாமியச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் ஓர் உறுதியான அடித்தளத்தை இவருக்கு அமைத்துக் கொடுத்தது எனலாம்.

எவ்வளவு தடைகள், இடையூறுகள் இருந்த போதிலும் அவர் தமது இஸ்லாமியப் பணியினைக் கைவிடவில்லை. நாடெங்கிலும் கூட்டங்களில், கருத்தரங்குகளில் பங்குபற்றி உரை நிகழ்த்தினார். தமது பேச்சாற்றலினாலும், அறிவுத் திறமையினாலும் இஸ்லாத்தின் உண்மைத் தோற்றப்பாட்டினை எங்கும் பரப்பினார். நாடெங்கிலுமிருந்து அழைப்புகள் குவிந்தன. சளைக்காமல் தொடர்ச்சியாக சொற்பொழிவுகள் செய்தார். அவரது பேச்சுக்கள் புத்திஜீவிகள், மாணவர், பாமரர், பெண்கள் அனைவரையும் கவர்ந்தன. அவரது உரையினைக் கேட்பவர்கள் தமது உள்ளத்தினை புரட்சிகர சிந்தனைகளினாலும், ஷாவுக்கெதிரான போராட்ட உணர்வினாலும் நிரப்பிக் கொண்டனர்.

இப்படியான புரட்சிகர நடவடிக்கைகள் அரசாங்கத்தை கலக்கமடையச் செய்தன. மீண்டும் அவரைக் கைது செய்ய முயற்சிகள் நடந்தன. ஆனால் இம்முறை அவர் தலைமறைவாகி விட்டார். இதனால் கோபப்பட்ட ஷாவின் அரசு அவரது தந்தையாரைக் கைது செய்து பணயமாக வைத்தது. இதனால் அலி ஷரிஅத்தி தாமாகவே சரணடைந்து தமது தந்தையாரை விடுதலை பெறச் செய்தார். மீண்டும் சிறை வாசம். சித்திரவதைகள்.

அலி ஷரிஅத்தி சிறையிடப்பட்ட செய்தி நாடெங்கிலும் மட்டுமின்றி உலகிலும் காட்டுத் தீ போல் பரவியது. உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமிருந்த அவரது நண்பர்கள், ஆதரவாளர்கள், மாணவர்களிடமிருந்து அவரை விடுதலை செய்யுமாறு கோரும் வேண்டுகோள்கள் ஷாவின் அரசிற்கு விடுக்கப்பட்டன. போராட்டங்கள் இடம்பெற்றன. இப்படியான தொடர்ச்சியான நெருக்குதல்கள் அவரை விடுதலை செய்ய அரசை நிர்ப்பந்தித்தன. அலி ஷரிஅத்தி விடுதலை செய்யப்பட்டார்.

விடுதலையான பின்னரும் சவாக் உளவுப்படை அவரை தொடர்ந்து கண்காணித்தே வந்தது. அவரது சகலவிதமான அரசியல், சமூக, மார்க்க நடவடிக்கைகளும் கட்டுப்படுத்தப்பட்டன. பின்னர் அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதி மறுக்கப்பட்டது.

இப்படியான அடக்குமுறைகளில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ள நினைத்த அலி ஷரிஅத்தி ஈரானை விட்டு வெளியேறத் தீர்மானித்தார்.

1976ன் இறுதிப் பகுதியில் ஈரானை விட்டும் அமெரிக்கா செல்லும் எண்ணத்துடன் வெளியேறினார். சிறிது காலம் பாரிசில் தரித்துவிட்டு அமெரிக்கா செல்லும் வழியில் இங்கிலாந்திற்கு வந்து சேர்ந்தார். 1977ம் ஆண்டு ஜூன் மாதம் 19ம் திகதி அவர் தங்கியிருந்த ஹோட்டலில் வைத்து சவாக் உளவாளிகளினால் மர்மமான முறையில் கொல்லப்பட்டார். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

டொக்டர் அலி ஷரிஅத்தி அவர்கள் ஹஸ்ரத் ஸெய்னப் (ரலி) அவர்கள் மீது அபிமானம் கொண்டவர்கள். அவரது இறுதி விருப்பப்படி அவரது ஜனஸா இங்கிலாந்திலிருந்து டமஸ்கஸ் நகரிற்கு எடுத்துச் செல்லப்பட்டு ஹஸ்ரத் ஸெய்னப் (ரலி) அவர்களின் சமாதிக்கருகே நல்லடக்கம் செய்யப்பட்டது.

டொக்டர் ஷரி அத்தி அவர்கள் இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் அவருடைய நூல்களும், உரைகளும் இவ்வுலகை விட்டுப் பிரியமாட்டா. அலி ஷரிஅத்தி அவர்கள் பல்வேறு வகையான பல நூல்களை எழுதியுள்ளார். இந்நூல்கள் இளம் சந்ததியினர்க்கு இஸ்லாத்தினை விளங்கிக் கொள்ளும் சரியான பாதையை இனம் காட்டக் கூடியன என்பதில் சந்தேகமேயில்லை.

## முதலாவது இரவு உரை :

எனது இவ்வுரையானது இஸ்லாத்தினை விளங்கிக் கொள்ள ஒருவர் உபயோகிக்கக் கூடிய பல்வேறு அணுகுமுறைகளை உள்ளடக்கியதாகும். ஏதாவதொரு விடயத்தினை விளங்கிக் கொள்வதில் உதவும் பல்வேறு அணுகுமுறைகளை ஒரு குறித்த முறையியலுக்கு (Methodology) கொண்டு வருவது ஒரு முக்கியமான— விஞ்ஞான பூர்வமான மனவுருவாகும். எமது விடயம் இஸ்லாத்தினை விளங்கிக் கொள்ளல் என்பதாகும்.

ஒரு பிரச்சினையை அணுகும் போது ஒரு முறையியலுக்கு வருவதானது விஞ்ஞான ரீதியில் குறிப்பிடக்கூடிய ஒரு தோற்றப்பாடாகும். உண்மையினைக் கண்டறிவதில் ஒரு சரியான முறையினைக் கைக்கொள்ளலானது தத்துவம், விஞ்ஞானம் என்பவற்றைக் கைக்கொள்வதை விடவும், ஏன் ஒரு துறையில் திறமைசாலியாய் இருப்பதை விடவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

மத்திய காலப் பகுதியில் ஓர் ஆயிரம் ஆண்டுகளாக ஐரோப்பா மந்தமாய் இருந்ததை நாம் அறிவோம். எனினும் இம் மந்த காலத்தின் பின் ஐரோப்பா விஞ்ஞானம், கலை, இலக்கியம் போன்ற சகல மானுட, கலாசாரத் துறைகளிலும் ஒரு புரட்சிகர வளர்ச்சியைக் கண்டது. இவ்வியக்கம் அல்லது சிந்தனைப் புரட்சியே இன்றைய நாகரிகம், கலாச்சாரம் என்பவற்றின் அடித்தளமாய் அமைந்தது. இங்கு சற்று நின்று எம்மை நாமே ''ஓராயிரம் ஆண்டு காலமாக அல்லது ஒன்றிரண்டு நூற்றாண்டுகளாகவாயினும் மந்தமாக இருந்த ஐரோப்பா எவ்வாறு திடீரென தனது திசையை மாற்றி உண்மையைக் கண்டு கொண்டது?'' என்று கேட்க வேண்டும்.

இது ஒரு முக்கியமான கேள்வி மட்டுமன்றி விஞ்ஞானம் பதிலளிக்க வேண்டிய மிகச் சிக்கலான கேள்வியும் கூட.

சந்தேகத்திற்கிடமின்றி ஒரு புறத்தில் பல வித்தியாசமான காரணிகள் மத்திய கால ஐரோப்பாவின் மந்த நிலைக்கு காரணமாய் அமைந்துள்ளன. மறுபுறத்தில் இன்னும் பல காரணிகள் தூக்கத்திலிருந்த ஐரோப்பாவைத் திடீரெனத் தட்டி எழுப்பி அதனை ஓர் இயக்கத்திற்கும், சக்திமிக்கதொரு முன்னேற்றத்திற்கும் இட்டுச் சென்றுள்ளன.

மத்திய காலப் பிரிவில் ஆயிரம் ஆண்டுகளாக ஐரோப்பாவின் சிந்தனை, கலாச்சாரம், நாகரீகம் என்பவற்றின் மந்த நிலைக்கு அரிஸ்டோட்டலின் ஒப்புவமை முறைகள் (Analogical Methods) காரணமாயிருந்தது என்பதை இங்கு நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். பொருட்களையும், பிரச்சினைகளையும் இவ் வழியில் நோக்குவது மாற்றமடையத் தொடங்கியவுடன் விஞ்ஞானமும், சமூகமும் மாறத் தொடங்கி விட்டன. அவற்றுடன் மானுட வாழ்க்கையுமே மாறத் தொடங்கியது. இங்கு நாம் கலாசாரம், சிந்தனை, விஞ்ஞான வளர்ச்சி என்பவை பற்றியே பேசுகின்றோம்.

இதனால், அணுகுமுறை மாற்றமே இவ் இயக்கத்தின் முக்கிய காரணியாய் அமைகின்றது என்பது எமக்குப் புலனாகின்றது. மேலும், சமூகவியல் கண்ணோட்டத்தில் இந்த மாற்றத்திற்கான காரணி பிரபுத்துவத்திலிருந்து மத்திய வர்க்கத்திற்கான இயக்கமே என்பது தெளிவாகின்றது. அத்துடன் இவ் இயக்கமே இஸ்லாமிய கிழக்கிற்கும், கிறிஸ்தவ மேற்கிற்கும் இடையிலான பாதுகாப்பு அரணையும் திறந்து விட்டது எனவும் அறியப்படுகின்றது.

ஒன்றில் வளர்ச்சியுடன் அல்லது அழிவுடன் சம்பந்தப்பட்டிருப்பினும், அணுகுமுறையானது உணர்வுபூர்வமானதொன்றாகும். அது மந்த நிலை, மௌட்டீகம், அல்லது சலனம் அல்லது வளர்ச்சிக்கான காரணியை மதிப்பிடும் தனித் திறனல்ல. ஆனால் இதில் உபயோகிக்கப்பட்ட முறையியலே முக்கியமானது. கி. மு. 4ம், 5ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அறிவாளிகள் கி. பி. 14ம், 15ம், 16ம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த அறிவாளிகளுடன் ஒப்பிடப்படக் கூடியவர்களல்லர். அரிஸ்டோட்டல், பிரான்ஸிஸ் பெகனை விடவும், பிளேட்டோ, றொஜர் பெகனை விடவும் கூடிய அறிவுடையோர் என்பதில் சந்தேகமில்லை. எனினும்

மத்திய காலப் பிரிவில் வாழ்ந்த அரிஸ்டோட்டல் போன்ற அறிவாளிகள் ஆயிரம் ஆண்டுகளான மந்தநிலைக்கு காரணமாயிருக்கையில், அவர்களை விடவும் அறிவின் அடிமட்டத்தில் இருந்தவர்களால் எவ்வாறு விஞ்ஞான வளர்ச்சிக்கான அடிக்கல்லை நாட்ட முடிந்தது? ஒரு சராசரி மனிதன் விஞ்ஞான வளர்ச்சியையும், மக்களில் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துகையில் எவ்வாறு இப்படியான ஓர் அறிவாளி உலகின் மந்த நிலைக்கு காரணமாயிருந்தார்?

இரண்டாமவர் (சராசரி மனிதர்) சரியான சிந்தனையையும், முறையியலையும் கண்டு கொண்டதே இதற்குக் காரணம். இந்த வழியில் ஒரு சராசரி ஆத்மாவினுல் உண்மையைக் கண்டு கொள்ள முடியும். ஆனுல், பிரச்சினைகளைக் கையாளும் வழியையும், சரியான சிந்தனை முறையையும் புரியாத ஒரு சிறந்த அறிவாளியினுல் அவரது அறிவை பயனளிக்கக் கூடிய வகையில் உபயோகிக்க முடியாது.

கி. மு, 4ம், 5ம் நூற்றுண்டுகளின் கிரேக்க நாகரீகத்தில் பல அறிவாளிகள் வாழ்ந்ததை நாம் கண்டு கொள்ள முடிகின்றது. மானுட வரலாற்றில் அவர்களின் அறிவு செல்வாக்குப் பெற்றிருந்தது. ஏதென்ஸ் நகரில் அவர்கள் அத்தனை பேர் கூடி வாழ்ந்த போதும் அவர்களால் ஒரு சக்கரத்தையேனும் கண்டுபிடிக்க முடியவில்லை. மாருக இன்றைய ஐரோப்பாவில் அரிஸ்டோட்டலை கண்டோ அல்லது அவரது சொற்களைக் கேட்டோ இராத ஒரு சராசரித் தொழில் நுட்பவியலாளன் எத்தனையோ கண்டுபிடிப்புகளைச் செய்து விடுகின்றுன்.

தோமஸ் எடிசன் இதற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணமாயுள்ளார். அவருடைய தத்துவஞான அறிவானது அரிஸ்டோட்டலின் ஒரு மூன்றுந்தர மாணவருடையதை விட குறைவாயிருக்கலாம். எனினும் அவர் இயற்கையில் மறைந்திருந்த விதிகளை கண்டுபிடிக்கவும், ஆயிரம் சிறிய பெரிய கண்டுபிடிப்புகளின் மூலம் கைத்தொழில் ஆக்கத்திற்கும் செய்த பங்களிப்புகள் அரிஸ்டோட்டலினுல் 2400 ஆண்டுகளாக வளர்க்கப்பட்ட மாணவர்களினுடையதை விடவும் அதிகமானவை.

சரியான சிந்தனையே சரியான நடத்தையாகும். மெதுவாகவே நடக்க முடிந்த ஒரு முடவன் சரியான, சுலபமான பாதையைத் தெரிவு செய்து கொண்டாருயின், ஒரு கற்பாதையில் ஓடும் வெற்றி வீரனை விடவும் விரைவாக தனது இலக்கை

அடைந்து கொள்வான். எவ்வளவு வேகமாக ஓடினாலும் அவ் வீரனால் தனது இலக்கை அடைய முடியாது. அந்த முடவன் சரியான பாதையைத் தெரிவு செய்து கொண்டானானால் அவன் தனது இலக்கையும், தூரத்தையும் நிச்சயம் அடைந்தே தீரு வான்.

எந்தவொரு அறிவியல் துறையிலுமே, - அது இலக்கியம், சமூகம், கலை அல்லது உளவியல் என்பவற்றை அணுகுவதாகி னும், சரியான முறையைத் தெரிவு செய்ய வேண்டும் என்பதே இங்கு குறிப்பிடப்படுகின்றது. எந்தவொரு ஆராய்ச்சியாளரும் அவர் தமது ஆராய்ச்சியைத் தொடங்குவதற்கு முன்னரேயே சிறந்த ஓர் அணுகுமுறையைத் தெரிவு செய்து கொள்ள வேண் டியதவசியம்.

நாம் எமது இஸ்லாமிய வரலாற்றின் அனுபவங்களில் இருந்து அனுகூலம் பெற வேண்டும். நாம் ஒரு சிறந்த மார்க் கத்தை பொறுப்புடன் பின்பற்றுபவர்கள் என்பதை புரிந்து கொள்வதுடன், இஸ்லாத்தினை சரியாகவும், முறைமையாகவும் அறிந்து கொள்ளவும் வேண்டும்;

நாம் வாழும் காலம் எங்களுக்குப் புரியாதவற்றை வணங் குகின்ற காலமல்ல. இது குறிப்பாக கற்றறிந்தவர்கட்கே பொருத்தமானதாகும். ஆத்மீக வாதிகளினால் இவர்கள் முரண் படுத்தப்படும் போதும் கூட இவர்களின் கடமை அதிகமானது. அது ஓர் இஸ்லாமியக் கடமை மட்டுமன்றி விஞ்ஞான பூர்வ மானதும், மானுட ரீதியானதுமான ஒரு கடமையுமாகும். இது இஸ்லாத்தினை விளங்கிக் கொள்வதில், கருத்துள்ள ஓர் அணுகு முறையினைக் கண்டுகொள்வதையும் ஒத்தது.

ஒருவரின் தகைமையானது விகிதாசாரமாக அவர் அறிந்த வற்றிலிருந்து அவரது விசுவாசத்திற்கு ஏற்றவாறு கணிப்பிடப் படுகின்றது. விசுவாசம் கொள்வது மட்டும் நற்பண்பாக மாட் டாது. நாம் ஒன்றை விசுவாசிக்கின்றோம்; அது பற்றி எமக்குத் தெரியாது எனில் அதில் பெறுமதியில்லை. ஏனெனில் நாம் விசுவாசிப்பது பற்றி நன்றாக அறிவதில் இருந்து தான் எமது நற்பண்பே பிறக்கின்றது.

நாம் இஸ்லாத்தினை விசுவாசிக்கின்றோம். எனவே நாம் அது பற்றி அறிந்து கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம். எனவே

அதனை நன்ருக அறிந்து கொள்வதற்கு ஒரு சரியான அணுகு முறையினை நாம் அடைய வேண்டும். இங்கே ''இஸ்லாத்தினை நன்ருக அறிந்து கொள்வதற்கு எது சிறந்த அணுகுமுறை?'' என்ற வினு எழுகின்றது.

இஸ்லாத்தினை அறிந்து கொள்ள உதாரணமாக உயிரியல், உளவியல், சமூகவியல் என்பவற்றின் அடிப்படையில் அமைந்த ஓர் ஐரோப்பிய முறையினை உபயோகிக்கக் கூடாது. அதனை விட வும் ஒரு சிறந்த முறையை நாம் முன்வைக்க வேண்டும். நிச்சயமாக நாம் ஐரோப்பிய விஞ்ஞான முறைகளை அறிய வேண்டும். அதற்காக அவற்றையே நாம் பிரதி பண்ணக் கூடாது.

இன்று எல்லாத் துறைகளிலும் எல்லா விஞ்ஞான முறைகளுமே மாறிவிட்டன. அவை ஒரு புதிய தோற்றம் பெற்றுள்ளன. கட்டாயத்தின் கட்டாயமான மார்க்க உண்மைகளும் அவை போன்றவையே!

இஸ்லாத்தினை அறிந்து கொள்வதற்கு ஏனைய முறைகளை விட்டும் தவிர்ந்த ஒரு பிரத்தியேகமான ஓர் அணுகுமுறையினை எம்மால் தெரிவு செய்து கொள்ள முடியாது என்பது தெளிவாகின்றது. இஸ்லாம் ஒரு தனிப் பரிமாண மார்க்கம் அன்று. இஸ்லாம் முற்றுமுழுதாக மானுடத்தின் பாவமீட்சி உணர்வில் மட்டும் அமைக்கப்பட்ட மார்க்கமோ அன்றி மனிதனுக்கும் ஆண்டவனுக்குமான தொடர்பினை கட்டுப்படுத்தும் மார்க்கமோ அல்ல. இது இஸ்லாமிய விசுவாசத்தின் ஒரு பரிமாணமேயாகும். இக் குறித்த பரிமாணத்தினை அறிந்து கொள்வதாயின் நாம் தத்துவ ரீதியான ஒரு முறைக்குத் திரும்ப வேண்டும். ஏனெனில் ஆண்டவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான தொடர்பானது இச் சிந்தனைத் துறையின் ஒரு பகுதியேயாகும்.

இவ் விசுவாசத்தின் மற்றைய பரிமாணம் இப் பூமியில் ஒருவரின் வாழ்க்கைப் பாதையுடன் சம்பந்தப்பட்டதாகும். இந்தப் பரிமாணத்தின் உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டுமாயின் நாம் இன்றைய சமூக, வரலாற்று முறைகளை உபயோகிக்க வேண்டும்.

ஆக, நாம் இஸ்லாத்தினை ஒரு கோணத்தில் மட்டுமே நோக்கின் பல்பக்கப் பளிங்கு ஒன்றின் ஒரு பரிமாணத்தை மட்டுமே பார்த்தவர்களாகி விடுவோம்.

இவ் விடயத்தினை நாம் சரியாக நோக்கினால் இஸ்லாம் பற்றிய ஒரு பொதுவான அறிவைப் பெற இது போதாது என்பதை உணர்ந்து கொள்ளலாம். வரலாற்றில் வரையப்பட்ட பல்வேறு விஞ்ஞானங்களில் இருந்து குர்ஆன் பல்பரிமாணங்களின் ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது.

அல்குர்ஆன் ஓர் இலக்கிய நூலா அல்லது ஒரு வசன நூலா எனும் விடயம் பற்றி பல மேதைகளும் கலைஞர்களும் ஆலோசித்துள்ளனர். ஒருவர் அல்குர்ஆன் மீது நம்பிக்கை கொள்ளக் காரணமாயிருக்கும் இஸ்லாத்தின் ஏனைய பரிமாணம் அதன் தத்துவஞான போதனைகளாகும். இன்றைய தத்துவஞானிகள் இப் பரிமாணத்தினைக் கருத்திற் கொள்வார்களாக!

சமூக, சரித்திர, உளவியல் பரிமாணங்களை உள்ளடக்கிய மானுட தோற்றப்பாட்டுப் பரிமாணமே அல்குர்ஆனின் மிக முக்கிய பரிமாணமாகும். இதுமிகக் குறைவாகவே அறியப்பட்டுள்ளது. இந்தப் பரிமாணம் அறியப்படாமல் இருப்பதற்கான காரணங்களில் சமூகவியல், உளவியல், மானுட விஞ்ஞானம் என்பன பொதுவாக நவீன கலைகளாகும் என்பதும் ஒன்றாகும். மேலும் இப் பரிமாணம் முன்னோர்களினால் எழுதப்பட்ட வரலாற்றுப் பாடங்களிலிருந்தும், புத்தகங்களிலிருந்தும் வேறுபடுகின்றது.

இனங்கள், சமூகங்களின் தலைவிதி, அவற்றின் தொடர்புகள், அழிவிற்கான காரணங்கள் போன்ற வரலாற்று நிகழ்வுகள் விசேடமாக அல்குர்ஆனின் நீண்ட வசனங்களிலேயே குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஒரு வரலாற்றாசிரியன் இவற்றை விஞ்ஞான ரீதியாகப் படிக்க வேண்டும். ஒரு சமூகவியலாளர் இவற்றை சமூகவியல் முறைகளில் நோக்க வேண்டும்.

இயற்கை விஞ்ஞானம், சமூகத் தோற்றப்பாடுகள் என்பவற்றின் பிரச்சினைகளை ஆலோசிக்கவும், விளங்கிக் கொள்ளவும் ஓர் இயற்கையான முறை தேவைப்படுகின்றது.

எனது விசேட துறை வரலாறும், சமூகவியலுமாகும். இதனால் அணுகுமுறைத் திட்டமாக சிந்தனைக்கு வரும் எதற்கும் நான் எனக்கு அனுமதி வழங்குகின்றேன். நான் இங்கு ஒரே நோக்கிலான இரு முறைகளைக் குறிப்பிடுகின்றேன். அவை மானுட விஞ்ஞானத்தின் வரலாற்று, சமூகக் கல்விகளேயாகும். எனது நிலையைத் தெளிவுபடுத்துவதற்காக மார்க்கத்தை ஒரு தனி மனிதனுக்கு ஒப்பிடுகின்றேன்.

ஒரு தலைசிறந்த மனிதரை அறிந்து கொள்ள இரண்டு வழிகளே உள்ளன. அந்த சிறந்த மனிதரை அறிந்து கொள்ள இவ்விரு முறைகளும் ஒன்றுபடுத்தப்படல் வேண்டும். ஒருவர் அவரை அறிய முற்படுகையில் முதலில் விஞ்ஞான பூர்வமாக அவரின் சிந்தனைகள், ஆக்கங்கள், ஆலோசனைகள், உரைகள், புத்தகங்கள் என்பவற்றுடன் தாம் பரிச்சயமுடையவராக மாற வேண்டும். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், ஒரு தனிமனிதனை அறிந்து கொள்ள அவரின் எண்ணம், சிந்தனைகள், கருத்துக்கள் என்பவற்றை ஒருவர் அறிய வேண்டும். ஆராய்ச்சி மட்டும் போதுமானதன்று. ஏனெனில் ஒருவரின் எழுத்துக்களிலும், உரைகளிலும் அவரது பிரத்தியேக வாழ்க்கையின் தோற்றப்பாடுகள், முழுதாகப் பிரதிபலிக்க மாட்டா. அவற்றில் பிரத்தியேக வாழ்க்கையின் பிரதிபலிப்புகள் மட்டுமே வெளியாகலாம். ஆனால் அவை உண்மையா என்பது தெரியாது.

மற்றைய வழி அந்த மனிதரைப் பற்றி அவரது வாழ்க்கை, குடும்பப் பின்னணிகளை ஆராயும் வழியாகும். அதாவது அவர் எங்கே பிறந்தார்?, அவரது குலம், இனம் என்ன?, அவரது இளமைப் பராயத்தை எப்படிக் கழித்தார்?, எப்படி வளர்க்கப்பட்டார்?, அவர் எப்படியான சூழலில் வாழ்ந்தார்?, எங்கே படித்தார்?, யார் யார் அவருடைய ஆசிரியர்கள்?, அவருடைய வெற்றிகள், தோல்விகள் யாவை?, இன்னும்..... இப்படி ஆராய்வதாகும்.

விமர்சன ரீதியில் ஒரு தனிமனிதரை அறிந்து கொள்ள ஒருவர் பின்பற்ற வேண்டிய இரு அடிப்படை வழிகள் உள்ளன, முதலாவது வழி அவரின் சிந்தனைகள், கருத்துக்களை அறிவது. மற்றது அவரது வாழ்க்கையினை ஆரம்பம் முதல் ஆராய்வது.

ஒரு மார்க்கம் ஒரு மனிதனை ஒத்தது. அதன் ஆக்கங்களும், சிந்தனைகளும் அதன் (வேத) நூலே. அதுவே அச்சிந்தனைப் பிரிவின் திட்டத்தை ஆக்குகின்றது; மக்களை இணையுமாறு அழைக்கின்றது. ஒரு மார்க்கத்தின் சுயசரிதையும், விளக்கமுமே அதன் வரலாற்றை அமைக்கின்றன.

ஆக, இன்றைய தரத்திற்கு ஏற்ப இஸ்லாத்தினை சரியாகவும், விபரமாகவும் அறிந்து கொள்ள இரு பிரதான வழிகள் உள்ளன. முதலாவது அல்குர்ஆனைப் படிப்பதாகும். அது சிந்தனைகள், கருத்துக்கள், விஞ்ஞானம் என்பவற்றின் குவியலாகும். அதுவே

இஸ்லாம் எனப்படுகின்ற சிறந்ததொரு தோற்றப்பாடாகும். இரண்டாவது வழி நபித்துவத்திலிருந்து தற்காலம் வரையிலாக இடம்பெற்ற மாற்றங்களை விபரிக்கும் இஸ்லாத்தின் சரித்திரத்தைப் படிப்பதாகும்.

இது இஸ்லாத்தை அறிந்து கொள்ளும் ஒரு முறை. எனினும் துரதிஷ்டவசமாக இஸ்லாத்தினை குறிப்பாக அல்குர்ஆனையும், இஸ்லாமிய சரித்திரத்தினையும் கற்பதற்கான இவ் அணுகு முறைகள் இன்றைய காலத்தில் மிகவும் பலவீனமாகவே உள்ளன. விஞ்ஞானபூர்வ முறையில் இஸ்லாத்தை ஆராய்வதில் இவை பக்கவிலக்கு இடங்களில் எல்லைகளில் அமைந்துள்ள குறிப்புகளாக மட்டுமே உள்ளன. அதிஷ்டவசமாக தற்போது இஸ்லாமிய சமூகத்தின் விழிப்புணர்ச்சியினால் அல்குர்ஆனின் உள்ளடக்கத்தையும், இஸ்லாமிய வரலாற்றையும் ஆராய்வதில் முஸ்லிம்களின் ஆற்றல் தினமும் அதிகரித்துக் கொண்டே வருகின்றது.

பர்ஹாத் அப்பாஸ் அவர்கள் தம்முடைய ''ஏகாதிபத்திய வாத இரவு'' (The night of Imperialism) எனும் நூலில் ''ஷேக் முஹம்மது அப்துஹ் அவர்கள் மொரோக்கோ, அல்ஜீரியா, டியூனிசியா போன்ற வட ஆபிரிக்க நாடுகளுக்குச் சென்று அல்குர்ஆன் விளக்க போதனைகளை ஆரம்பிக்கத் தொடங்கியது முதல் அங்கெல்லாம் சமூக எழுச்சி ஏற்பட்டுள்ளது'' எனக் குறிப்பிடுகின்றார். இப்போதனைகள் சாதாரணமாக மார்க்கக் கூட்டங்களில் நிகழ்த்தப்படவில்லை.

இந் நூலாசிரியர் ஒரு மதவாதியல்ல; அதற்கு எதிரானவர்; எனினும் அவர், முஸ்லிம்களும், மார்க்க மேதைகளும், மார்க்க ஆராய்ச்சியின் ஏனையவற்றை அப்பால் வைத்துவிட்டு அல்குர்ஆனையும், அதன் போதனைகளையும் ஆராயத் தொடங்கியவுடன் வட ஆபிரிக்க நாடுகளில் மாற்றமும், எழுச்சியும் ஏற்பட்டதை ஒப்புக் கொள்கின்றார்.

ஆக, அல் குர்ஆன் பற்றிய சரியானதும், விஞ்ஞானபூர்வமானதுமான அறிவைப் பெற இரண்டு வழிகள் உள்ளன. முதலாவது இஸ்லாமிய சிந்தனையின் போதனை நூலாக அல் குர்ஆனை அறிவது; இரண்டாவது பல்வேறு வளர்ச்சிப் படிகளைத் தன்னகத்தே பதிய வைத்துள்ள இஸ்லாமிய வரலாற்றினை அறிவது.

இன்றைய முஸ்லிம்கள் தங்களின் பள்ளிவாசல்களை சமூக நடவடிக்கைகளின் மத்திய நிலையங்களாக மாற்றுவார்களேயா

ளுல் - அல் குர்ஆன், அதன் சரித்திரம் எனும் இரு விடயங்களில் மட்டும் தங்கியிருப்பார்களாளுல் - அதன் மூலம் வெகுஜனத்திற்கு கல்வியூட்டக் கூடிய ஒரு திட்டத்தினை வகுப்பார்களேயாளுல் அதன் மூலம் அவர்கள் இஸ்லாமிய சிந்தனை மாற்றங்களின் வளர்ச்சிக்கு அடித்தளம் இட்டவர்களாவார்கள்.

இஸ்லாத்தினை அறிந்து கொள்ள இன்னும் ஒரு முறை உள்ளது. அந்த முறை மாதிரியியல் (Typology) எனப்படுகின்றது. இன்று இம்முறையினையையே, சமூகவியல் பிரச்சினைகளைத் தீர்க்கவும், குறிப்பாக ஒரு சிந்தனைப் பிரிவுடன் இன்னொன்றை ஒப்பீடு செய்யவும் ஏதுவான அதிசிறந்த ஓர் அணுகுமுறை என்று பெரும்பாலான சமூகவியலாளர்கள் நம்புகின்றனர்.

மானுட விஞ்ஞானத்தினை ஆராய ஐரோப்பாவில் உபயோகிக்கப்பட்ட ஒரு முறையினையே நான் இஸ்லாத்தினை அறிந்து கொள்ள உபயோகித்தேன். இதனுல் எல்லா மார்க்கங்களுக்கும் உபயோகிக்கக் கூடிய ஒரு முறையினை நான் அடைந்து கொள்ள முடிந்தது.

அம்முறையானது - ஒரு மார்க்கத்தின் பிரசித்தி பெற்ற ஐந்து தோற்றப்பாடுகளை அறிந்து அவற்றை பிறிதொரு மார்க்கத்தின் அவற்றிற்குச் சமனுன தோற்றப்பாடுகளுடன் ஒப்பிடுதலாகும்.

1. ஒரு மார்க்கத்தினைப் பின்பற்றுபவர்கள் வணங்கும் அதன் கடவுள் அல்லது கடவுள்கள்.

2. மக்களை விசுவாசிக்குமாறும் பின்பற்றுமாறும் அழைப்பு விடுக்கும் ஒரு மார்க்கத்தின் அடிப்படைச் சட்டமான அதன் வேத நூல்.

3. மார்க்கத் தூதினைப் பிரகடனப்படுத்திய ஒவ்வொரு மார்க்கத்தினதும் தூதுவர்.

4. மார்க்கம் யாரை விழித்து தனது தூதை வெளிப்படுத்துகின்றதோ அவர்களின் அமைப்பும், தோற்றப்பாடுகளும். ஒவ்வொரு தூதரும் தமது வேத தூதை வித்தியாசமான வழிகளில் பிரகடனம் செய்கின்றுர். ஒருவர் மக்களையும், இன்னுமொருவர் அரசர்களையும், பிரபுக்களையும் மற்றுமொருவர் விஞ்ஞானிகளையும், தத்துவ ஞானிகளையும், தெரிவுசெய்யப்பட்ட சிலரையும் விழித்து தனது தூதினை

வெளிப்படுத்துகின்றனர். சில வேளைகளில் ஒரு தூதர் ஒரு மனிதராக வாழ்ந்து கொண்டு வியாபித்திருக்கும் சக்திக் கட்டமைப்பினை ஏற்றுக் கொள்கின்றார். இன்னும் ஒரு தூதரோ சக்திக் கட்டமைப்புக்கு எதிராக எழுகின்றார்.

5. ஒவ்வொரு மார்க்கத்திலும் அதனால் பயிற்றுவிக்கப்பட்ட மிகச் சிலரே அதன் உதாரணங்களாகவும், பிரதிநிதிகளாகவும் உள்ளனர். இவர்களே அந்த மார்க்கத்தினை சமூகத்திற்கும், வரலாற்றிற்கும் வழங்குபவர்கள்.

ஒருவர், ஒரு தொழிற்சாலையின் வேலைகள் பற்றி முழுமையாக அறிய வேண்டுமாயின், அதிலிருந்து எவ்வளவு பொருட்கள் உற்பத்தியாகின்றன என்பதை அறிய வேண்டும். அல்லது பயிரிடக் கூடிய ஒரு துண்டு நிலத்தைப் பற்றி முழுமையாக அறிய வேண்டுமாயின் அதிலிருந்து எவ்வளவு தானியம் விளைந்துள்ளது என்பதை அறிய வேண்டும். ஒரு மார்க்கத்தினைப் பொறுத்த மட்டிலும் கூட அம்மார்க்கத்தினால் பயிற்றுவிக்கப்பட்டவர்களே அதன் உற்பத்திப் பொருட்கள் போன்றவர்கள். இவர்களே தனி மனித அமிசங்களான அம் மார்க்கத்தின் உற்பத்திகள்.

இதே வழியில் ஒருவர் இஸ்லாம் பற்றிய அறிவைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின், அவர் முதலில் இறைவனை அறிந்து கொள்ள வேண்டும். படைப்பினங்களை அறிவதன் மூலமாக - தத்துவஞானம் மூலமாக - ஆத்மாவின் விளக்கங்கள் மூலமாக - பாவமீட்சிகள் மூலமாக - விபரங்களை பரிசீலனை செய்தல் மூலமாக என இறைவனை அறிந்து கொள்ள பல வழிகள் சாத்தியமானவையாக உள்ளன.

ஆனால் நான் உங்களுக்கு அறிமுகம் செய்யும் முறை மாதிரியியல் (typology) முறையாகும். அம்முறையில் முதலில், இஸ்லாமியப் பரிசீலனைகளுக்கேற்ப இறைவனின் மாதிரி (type), மூலம் (origin), விதம் (mode), மனவுரு (concept), விசேட தன்மைகள் (particulars) என்பவற்றைக் கற்க வேண்டும். உதாரணமாக - சர்வ வல்லமையுடையோன் (omnipotent) என்றால் என்ன? அவன் கருணை நிறைந்தவனா? அவன் வியாபித்திருக்கும் இவ்வுலகை விட மேம்பட்டவனா? மானுடத்துடன் அவன் சம்பந்தப்பட்டவனா? அவனுடைய கருணை அவனுடைய சர்வ வல்லமையை மிகைத்ததா? அல்லவா? பொதுவாக அவன் எம் மாதிரியானவன்? அவன் எவ்வகையான கடவுள்?

ஒருவர் குறித்த விடயங்கள் பற்றிய ஒரு திட்டமான அறிவைப் பெற வேண்டுமாயின் அவர் அல் குர்ஆனை படிக்க வேண்டும்; அல்லது நாயகம் (ஸல்) அவர்களின் சொற்களைப் படிக்க வேண்டும்; அல்லது நாயகம் (ஸல்) அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட விசேடமானவர்களைப் பற்றிப் படிக்க வேண்டும். அல்லாஹ்வினை ஏனைய மார்க்கங்கள் கற்பனைப் படுத்தியுள்ள அஹ்ரமஸ்டா (Ahuramazda), யஹ்வா (Yahwa), ஸெயுஸ் (Zeus) போன்ற கடவுள்களுடன் ஒப்பிடும் போதும் கூட மேற்குறித்த தகுதிகள் அல் குர்ஆனில் தெளிவுபடுத்தப் பட்டவையாக அல்லது நாயகம் (ஸல்) அவர்களின் ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டவையாக அல்லது அவர்களின் சஹாபாக்களினால் குறிப்பிடப் பட்டவையாகவே உள்ளன,

இரண்டாவது படி — அல் குர்ஆனை அறிவதாகும். அது எவ்வகையான நூல்? அது எப் பிரச்சினைகளைக் கவனத்திற் கொள்கின்றது? அது இவ்வுலக வாழ்க்கை பற்றியா அல்லது மறுவுலக வாழ்க்கை பற்றியா அதிகம் பேசுகின்றது? அது தனிமனித, நீதி சம்பந்தமான விடயங்களையா அல்லது சமூகத் தோற்றப்பாடுகளையா அதிகம் கூறுகின்றது? அது உலகாய விடயங்களையா அல்லது ஆத்மீக விடயங்களையா அதிகம் ஆலோசிக்கின்றது? அது இயற்கைக்கா அல்லது தனிநபருக்கா அதிகம் இடமளிக்கின்றது? இறுதியாக அது எவ்வகையான பிரச்சினைகளை கவனத்திற் கொள்கின்றது, அவற்றை எந்த அமைப்பில் நோக்குகின்றது?

உதாரணத்திற்கு - இறைவனின் இருப்பை நிருபிக்கும் இறை வசனம் ''இறைவனை அறிந்து கொள்ள எமது ஆத்மாவினைத் தூய்மைப் படுத்துவோமாக!'' என்று கூறுகின்றது. எவ்வகையான கல்வியைக் கொண்டு நாம் நெருக்கத்தினை (இறைவனுடனை) அடைந்து கொள்ளலாம்; விடயங்களை அறிந்து கொள்ளலாம்? அல்லது இரு வழிகளுமே வேண்டியனவா? மேலும் நாம் ஏனைய வேத நூல்களான பைபிள், நான்கு வேதம் (Vedas), அவெஸ்டா (Avesta) போன்றவற்றுடன் அல் குர்ஆனை ஒப்பிட்டுப் பார்க்கவும் வேண்டும்.

மூன்றாவது படியானது — அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் (ஸல்) அவர்களை இம் மார்க்கத்தின் தூதராக அறிவதன் மூலம் இஸ்லாத்தினை அறிந்து கொள்வதாகும். ஒரு வரலாற்றாசிரியனைப் பொறுத்த மட்டில் அவர் இஸ்லாத்தின் தூதரை அறிந்து கொள்வது மிக முக்கியமானது. ஏனெனில் இஸ்லாத்

தின் தூதர் (ஸல்) போல் வேறு எவருமே, சரித்திரத்தில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறு பொறுப்புணர்ச்சி கொண்டவராக இருந்ததில்லை.

நாம் இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களின் ஆளுமை பற்றிப் பேசும்போது எமது நோக்கம், எவ்வாறு அவர் மனிதர்களுடன் ஒத்துப் போனார் என்பதையும், இறைவனுடனான அவரது தொடர்பையும் கவனத்தில் கொள்வதாக இருக்க வேண்டும், வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் நாம் அவர்களுடைய, மானுட பரிமாணம், இறைதூது ஆகிய இரண்டையுமே சிந்திக்க வேண்டும்.

உதாரணமாக - அவர்களின் மானுட பரிமாணத்தை கவனிக்கும் போது நாம் அவர்களின் பேச்சு, நடை, சிந்தனை, சிரிப்பு, இருப்பு, தூக்கம் போன்றவற்றின் வழிகளையும் கற்க வேண்டும். நாம் அவர்கள் எவ்வாறு அந்நியர், எதிரிகள், நண்பர்கள், குடும்பத்தினர்களுடன் தொடர்பு கொண்டிருந்தார் என்பதை அறிந்து கொள்ள வேண்டும். மேலும் அவர்களுடைய வெற்றிகள், தோல்விகள், சமூகப் பிரச்சினைகள் மீதான தாக்கம் என்பவற்றையும் மதிப்பீடு செய்து கொள்ள வேண்டும்.

ஆக, இஸ்லாத்தின் சத்தியம், ஆத்மா, அடிப்படை நிதர்சனம் என்பவற்றை அறிந்து கொள்ளும் முக்கிய வழிகளில் அதனுடைய தூதரை அறிதலும் ஒன்றாகும். மேலும் அவர்களை ஏனைய மார்க்கங்களின் தூதர்கள் அல்லது சிற்பிகளான மூஸா (அலை), ஈஸா (அலை), ஸொரோஸ்டர் (Zoroster), புத்தர் போன்றவர்களுடன் ஒப்பிட்டும் அறிய வேண்டும்.

**நான்காவது படி** -- இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களின் தோற்றப்பாட்டின் தகுதி பற்றி அறிவதாகும். உதாரணமாக - அவர் எதுவித அறிமுகமும் இன்றியா தோன்றினார்? யாராவது அவருக்காகக் காத்திருக்கின்றனரா? அவரது நபித்துவம் எவ்வாறானது என்பது பற்றி அவர் அறிந்திருந்தாரா? திடீரென ஒரு சக்தி அவரை அண்மித்து அவருடைய பேச்சு முறைகளை அல்லது அவருடைய ஆளுமையை மாற்றியது; இதனை அவர் ஆரம்பத்தில் தாங்கிக் கொள்ள கஷ்டப்பட்டார். அவர் தோன்றிய அக் காலத்தில் எவ்வாறான இயக்கம் அங்கு இருந்தது? அவர் எவ் வகுப்பினரை அதிகம் சார்ந்திருந்தார்? அவர் எவ்வகுப்பினருடன் மோத எழுந்தார்?

இக் கேள்விகளுக்கான விடைகள் இஸ்லாத்தின் தூதரை அறியவும், அவரின் பிறப்பின் தன்மையினை அறியவும் எமக்கு உதவக் கூடியன. இஸ்லாத்தின் தூதரின் வருகையினை தன்மையினை – சாதகமாகவோ அன்றி பாதகமாகவோ - இப்ராஹீம் (அலை) (Abraham), மூஸா (அலை) (Moses), ஈஸா (அலை) (Jesus), ஸொரொஸ்டர், கொன்பியூஸியஸ் (Confucius - சீன மத ஸ்தாபகர்), புத்தர் போன்ற ஏனைய மார்க்கங்களின் தூதர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாயின் நாம் ஒரு ஆச்சரியமான முடிவுக்கு வருவோம்.

இப்ராஹீமின் (அலை) பரம்பரையினர் தவிர்ந்த எல்லா தூதர்களுமே தங்களுடைய காலத்தில் வியாபித்திருந்த சக்திக் கட்டமைப்புகளை அங்கீகரித்தவர்களாகவும், அவற்றின் உதவியுடனேயே தங்களின் தூதினை வெளிப்படுத்தியவர்களாகவுமே இருந்தனர். ஆனால் இப்ராஹீம் (அலை) இலிருந்து இஸ்லாத்தின் தூதர் (ஸல்) வரையிலான தூதர்கள் வியாபித்திருந்த சக்திக் கட்டமைப்பிற்கு எதிரான ஓர் அமைப்பிலேயே இருந்தனர்.

இப்ராஹீம் (அலை) அவர்கள் தமது நபித்துவத்திலிருந்து ஒவ்வொன்றாக எல்லாச் சிலைகளையுமே உடைத்தெறிந்தார்கள். இறுதியாக பெரிய சிலையை உடைத்து விட்டு பல் இனக் கொள்கைக்கு தாம் எதிரானவர் என்பதைப் பறை சாற்றினார்கள்.

மூஸா (அலை) ஓர் இடையனைப்போல் உடையணிந்தவராக கையில் கைத்தடியுடன் பிர்அவுனின் (Pharoah) அரசவைக்குள் புகுந்து அவனுக்கு தமது எதிர்ப்பை தெரிவித்ததுடன் மக்களை ஒற்றுமைப் படுமாறும் அறைகூவல் விடுத்தார்கள்.

ஈசா (அலை) அவர்கள் யூத மத போதகர்களின் சக்திக் கட்டமைப்பினுக்கு எதிரான தமது போராட்டத்தை ஆரம்பித்தார்கள் ஏனெனில் யூத மத போதகர்கள் ரோம சாம்ராஜ்யத்தின் குடியேற்றக் கொள்கையுடன் தொடர்பு கொண்டும், அதனை ஏற்றுக் கொண்டும் இருந்தனர்.

நபிகள் முஹம்மது (ஸல்) தமக்கு நபித்துவம் கிடைத்ததிலிருந்து பிரபுத்துவம், அடிமை வைத்திருப்பவர்கள், தாயிப் நகரின் நிலச் சுவாந்தர்கள், குறைஷி வர்த்தகர்கள் ஆகியவர்களுடன் போராட்டத்தினைத் தொடங்கினார்கள்.

இவ்வொப்பீடுகள் மார்க்கங்களின் சத்தியம், ஆத்மா, போக்கு என்பவற்றை அறிந்து கொள்ள எமக்கு உதவக் கூடியனவையாகும்.

ஐந்தாவது படி — தெளிவான; சிறந்த தனிமனிதர்களை கட்டியெழுப்பும் அங்கங்களை உருவாக்கும் சிறந்த மனிதர்களை அறிவதன் மூலம் இஸ்லாத்தினை அறிவதாகும்.

நாம் யூத மதத்திற்கு ஹாறூன் (அலை) (Aaron) யும், கிறிஸ்தவ மதத்திற்கு புனித போலையும் (St. Paul), இஸ்லாத்திற்கு அலி (ரலி)யை அல்லது ஹுஸைன் (ரலி)யையும் உதாரணங்களாக தெரிவுசெய்து கொள்வோமாயின் இதன் மூலம் அம் மார்க்கங்களை நாம் அறிந்துகொள்ளலாம்.

இப்படியான மனிதர்களை தெளிவாகவும், விஞ்ஞானபூர்வமாகவும் அறிவது, ஒரு தொழிற்சாலையை அதன் உற்பத்திப் பொருட்களை இனம் கண்டு அறிந்து கொள்வதைப் போன்றதாகும். ஏனெனில் ஒரு மார்க்கம் ஒரு தொழிற்சாலையைப் போன்றே மனிதர்களைக் கட்டமைக்கின்றது.

இஸ்லாத்தின் தெளிவான ஓர் உதாரணமாக இன்றிரவு நாம் ஹுஸைன் (ரலி) அவர்களை எடுத்துக்கொள்வோம். ஒருவர் அல்லாஹ் மீது, அல்குர்ஆன் மீது, நாயகம் (ஸல்) அவர்கள் மீது விசுவாசம் கொள்வது என்றால் என்ன? ஹுஸைன் (ரலி) அவர்களின் வாழ்க்கை தெளிவானது. சமூகப் பிரச்சினைகளின் மீதும் மக்களின் தலைவிதியின் பாலும் உள்ள அவர்களின் ஈடுபாடு அவர்களின் நடத்தை மூலமும், தன்னலத் தியாகத்தின் மூலமும் எமக்குத் சான்றாக உள்ளன. அவரின் சத்தியம், நோக்கம், விசுவாசம் என்பன ஆபத்திற்குட்படின் எல்லாத் தொடர்புகளுமே அழிந்துவிடும் என்பதும் தெளிவாகின்றது.

ஹுஸைன் (ரலி) அவர்களின் வாழ்க்கை, சிந்தனைகள், தகுதிகள் என்பவற்றை அறிவதற்கு மேலதிகமாக ஒருவர் அவரை அவிசீனா (Avicenna), ஹல்லாஜ் (Hallaj) போன்ற முஸ்லிம்களுடன் ஒப்பிடலாம். அதில் அவிசீனா ஈரானிய தத்துவ ஞானத்தினாலும், மற்றவர் ஷுபிஇஸத்தினாலும் செல்வாக்குப் பெற்றவர்கள். இவர்கள் மூவரையும் ஒப்பிடுவதன் மூலம் நாம் தத்துவஞானம், ஷூபித்துவம், இஸ்லாம் என்பவற்றிற்கிடையிலான ஒற்றுமை, வேற்றுமைகளை பற்றி அறிந்து கொள்ளலாம்.

அவிசின் ஒரு தத்துவஞானி; விஞ்ஞானி; மேதை. இவர் இஸ்லாமிய தத்துவஞானம், விஞ்ஞானம் என்பவற்றிற்கு அதிக கௌரவம் கொடுத்துள்ளார். ஆனல், துரதிஷ்டவசமாக இம் மேதையின் இலக்கியம், தத்துவக் கருத்துக்கள் சமூகத்தை அடையும்போது, - இவற்றில் அவர் தம்மைத் தாமே அடக்கிக் கொண்டிருந்ததால் - அவர் எளிதாக வியாபித்திருந்த சக்திக் கட்டமைப்புக்கே சேவகம் செய்துள்ளார். மானுடத்தின் தலைவிதி மீதோ அன்றி சமூகத்தின் மீதோ இவர் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. உண்மையில் அவர் தனது தலைவிதிக்கும் ஏனையவர்களுடையதற்கும் எதுவித தொடர்பையும் உணர்ந்தாரில்லை. அவருடைய பணி விஞ்ஞானப் பிரச்சினைகளை ஆராய்வதாகவே இருந்தது. அன்றியும் எவ்வாறு அவருடைய வாழ்வு கழிகின்றது என்பது பற்றி எதனையும் அவருக்கு அது வித்தியாசப்படுத்திக் காட்டவேயில்லை. அவருக்கு யார் உதவுகின்றனரோ அவர்கட்கோ, அன்றி யார் அவருக்கு ஓர் ஸ்தானத்தை வழங்குகின்றனரோ அவர்கட்கோ இவர் எதுவித சிறப்பையும் கொடுக்கவில்லை. அவருக்கு எல்லாமே ஒன்றுதான். அவரிடம் விசேட கருத்து நோக்குகள் எதுவும் இருந்ததில்லை.

ஹல்லாஜ் நெருப்பைப் பிடித்துக் கொண்டு எரிந்தார். அவரிடம் கூக்குரலையும், காயங்களையும் விட எதுவித பொறுப்பும் இருந்ததில்லை. எதனால் அவர் எரிந்தார்? தன் இரு கைகளினாலும் தன் தலையைப் பிடித்துக் கொண்டு, அல்லாஹ்வின் நேசத்துடன் ''கலகம் என்னைப் பிடித்துக்கொண்டது. என்னுள் எரியும் நெருப்பிலிருந்து என்னை விடுவியுங்கள். நான் ஒன்றுமேயில்லை; நானே இறைவன்'' - அதாவது நான் நானில்லை; இருப்புக்கள் அனைத்தும் இறைவனே'' - என்று ஓலமிட்டவராக பக்தாத் நகர வீதிகளில் அலைந்து திரிந்தார்.

அந் நிலையில், உண்மையிலேயே அவருள் நிறைந்திருந்த அல்லாஹ்வின் ஞாபகம் என்னும் நெருப்பினுள்ளேயே அவர் அமிழ்ந்தார். ஆனல் 25 மில்லியன் ஹல்லாஜ்களால் ஈரான் நிறைந்திருப்பின் என்ன நடக்கும்? அவர்கள் அனைவரும் வீதிகளுக்கு ஓடிவந்து ஒவ்வொருவரும் ''என்னைக் கொன்று விடு! உடனடியாக என்னைக் கொன்று விடு! என்னல் அதனைத் தாங்க முடியவில்லை. என்னிடம் எதுவுமேயில்லை! அல்லாஹ்வைத் தவிர என்னுள் எதுவுமே இல்லை'' என்று ஓலமிட்டால் அவ்வீதிகள் மனநோய் ஆஸ்பத்திரிகளாகிவிடும். அவ்வகையான எரிதலானது ஒருவகையான ஆத்மீக மன நோயாகும்.

சமூகத்தின் எல்லா மனிதர்களும் ஹுஸைன் (ரலி)களாக, அபூதர் (ரலி)களாக மாறினல் அங்கு வாழ்க்கை அமையும்; சுதந்திரம் அமையும். அறிவும் கல்வியும் அதுபோல் சக்தியும் உறுதியும் நிலைபெறும்; எதிரிகள் அழிந்து போவர்; அல்லாஹ் மீதான நேயம் மட்டுமே அங்கு மீதியாயிருக்கும்.

## இரண்டாவது இரவு உரை :

எனது இன்றைய இரவின் அறிமுகமாக பிரதான விடயத்தினை ஆரம்பிப்பதற்கு முன் சில குறிப்புகளை முன்வைப்பது அதற்கு சம்பந்தமற்றதாகாது. நான் முன்வைக்கப் போகும் இக் குறிப்புகள் எனது அடிப்படை விடயங்களுடன் நேரடித் தொடர்பு அற்றவையா இருப்பினும் மிக முக்கியமானவை; இன்றியமையாதவை. அவற்றை முன்வைப்பதற்கு மிக அவசியம் உள்ளது.

எமது கஷ்டங்களைப் பற்றிப் பேசுவதானது அர்த்தமற்றதொரு செயல் எனும் முடிவுக்கு கடந்த சில வருடங்களுக்கு முன்னரே அறிவாளிகள் வந்துள்ளனர். இன்றுவரை நாம் அவற்றை உண்மை விடயமாக பேசிக் கொண்டு மட்டும் இருந்துள்ளோம். அது பற்றி ஏதாவது புரிய இதுவே உகந்த நேரம். பேசிக் கொண்டிருந்த காலம் முடிவடைந்து விட்டது. ஒவ்வொருவரும் சுறுசுறுப்புடன் தனது குடும்பத்தையும், சூழலையும் சீர்திருத்த வேண்டும்.

எனது கருத்துப்படி நாம் எடுத்துக் கொண்டுள்ள விடயத்தில் ஒரு வகையான நிதானம் நிறைந்துள்ளது. ஏனெனில் நாம் இதுவரை கஷ்டங்களைப் பற்றிப் பேசவில்லை. நாம் அவை பற்றிய ஒரு விஞ்ஞானபூர்வமான — பொருத்தமான பகுப்பாய்வு செய்யவில்லை. ஆக நாம் வருத்தப்பட்டுள்ளோமேயன்றி வேறில்லை. நோவுகள் ஏற்படும் போது முணங்குவது மட்டும் பிரயோசனத்தைத் தராது என்பது வெளிப்படை. இதுவரையில் நாம் எமது மனோதத்துவ, சமூக வேதனைகளைப் பற்றி சரியான முறையில் பேசவேயில்லை. கஷ்டங்களினால் ஒரு தவறான கருத்து எழலாம்.

ஆனால் நாம் அதனை இதுவரை இனங்கண்டு கொள்ளவில்லை என்பதை மிக மனவருத்தத்துடன் கூறிக்கொள்ள நான் விரும்புகின்றேன்.

பெற்ற அனுபவங்களை நடைமுறைப் படுத்திக் கொண்டவர்கள், கஷ்டங்களை அனுபவித்தவர்கள், சிரமங்களையும், பிரிவுகளையும் உணர்ந்தவர்கள் ஆகியோர் தாம் சரியான படித்தரத்தை அனுபவித்தவர்களாகும். நாம் எமது நோவினைகளையிட்டுப் பேசுவதானது மிக அடிமட்டத்திலேயே உள்ளது என்பதை அவர்களே அறிவர். வேதனைகள், ஊழல்கள், மாறுபாடுகள் என்பவற்றை அடையாளங் காணக்கூடிய மிகக் குறைந்த சாத்தியங்களையும், அறிவுடை நிலைகளையும் கூட அவர்களே உணரக் கூடியவர்கள். நாம் எமது கொள்கைகள், சிந்தனைப் பிரிவுகள், மார்க்கம் என்பவை பற்றி போதுமான அளவு பேசவில்லை என்பதைவிட பேசவேயில்லை என்பதே உண்மையாகும்.

''எமது வேதனைகள் பற்றி நாம் அறிவோம்; அவை பற்றி நாம் போதுமான அளவு பேசியுள்ளோம்; செயலில் இறங்க இதுவே சரியான தருணம்'' என்றெல்லாம் எவ்வாறு நாம் கூற முடியும்? நாம் ஒரு மார்க்க சார்புடைய சமூகத்தினர்கள். எமது மார்க்கமே எமது விஞ்ஞானத்தின் அடிப்படையாக அமைய வேண்டும். ஆனால் இன்றுவரை நமக்கு நமது மார்க்கத்தைப் பற்றியே எதுவும் தெரியாமல் உள்ளது.

எனது மாணவர்கள் என்னிடம் இப் பிரச்சினைகள் பற்றிய நூல்களைப் பற்றி கேட்கும் போது விடையளிக்கவே நான் வெட்கப்படுகின்றேன். இப் பிரச்சினைகள் பற்றிய நூல்கள் எதுவுமே இல்லாதிருப்பது பெரும் வெட்கக்கேடாகும்.

பல நூற்றாண்டுகளாக ஜஃபரி மத்ஹப்பையும், அலி (ரலி) அவர்களையும் பின்பற்றும் கௌரவம் பெற்றவர்கள் எமது நாட்டு மக்கள். ஹிஜ்ரி முதலாம் நூற்றாண்டிலேயே ஈரான் இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்டு விட்டது. தனது பழைய மார்க்கத்தினை இஸ்லாத்தைக் கொண்டு அது மாற்றீடு செய்து கொண்டது. அது அலி (ரலி) அவர்களினதும், அவர்களின் நண்பர்களினதும் சிந்தனைப் பிரிவையும், அலி (ரலி) அவர்களின் அரசாங்க அமைப்பையும், முன்பிருந்தது போலவே இன்றும் உத்தியோகபூர்வமாகப் பின்பற்றுகின்றது. ஆனால் இன்று அலி (ரலி) அவர்களைப் பற்றி, அல்லது ஷீயா மத்ஹபின் அடித்தளத்தை உருவாக்கிய-கஷ்டமான நாட்களில் அவர்கட்கு உதவிய அலி (ரலி) அவர்களின் நண்பர்களைப் பற்றி படிக்க ஒரு நூல் பற்றி ஒரு மாண

வர் என்னிடம் கேட்டால், நான் ஒன்றுமே கிடையாது என்றே அவருக்குக் கூறுவேன்.

சில நூல்கள் இருந்தனவென்று நாம் அறிகின்றோம். ஆனால் அவற்றின் பெயர்களை மட்டுமே நாம் அறிவோம். அலி (ரலி) அவர்கள் பின்பற்றும் அதே இஸ்லாத்தினைப் பின்பற்றும் எம்மிடம் அவர் பற்றியோ அல்லது அவரது நண்பர்கள் பற்றியோ ஒரு தரமான புத்தகமேனும் இல்லாமல் இருப்பது பெருத்த அவமானமாகும். 14 நூற்றாண்டுகளின் பின்னர் ஜோர்ஜஸ் ஜூடாக் என்ற கிறிஸ்தவர் அலி (ரலி) அவர்களையும், ஜௌதாத் அஸ்-ஷஹ்ர் என்ற சுன்னி சகோதரர் அபூதர் (ரலி) அவர்களையும் எமக்கு அறிமுகம் செய்துள்ளனர். இதுபற்றி நாம் வேதனைப்பட வேண்டும்.

ஸல்மான் பாரிஸீ (ரலி) அவர்களே இஸ்லாத்தினை ஏற்றுக் கொண்ட முதல் ஈரானியர். ஆரிய வம்சத்திலும் ஈரானியர்களிலும் அவர் ஒரு கௌரவமான இடத்தினை வகிக்கின்றார். நாயகம் (ஸல்) அவர்களின் அழைப்பினை ஏற்றுக்கொண்ட அன்னவர் மிகவும் உயர்வான மனிதர். நாயகம் (ஸல்) அவர்களுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவராக இருந்ததுடன், அவர்களின் குடும்பத்தில் ஓர் அங்கமுமாக இருந்தார். தேசிய மட்டத்திலும், மார்க்க ரீதியிலும் இப்படியானதொரு கௌரவமிக்க இடத்தினை வகிக்கும் இவர்களைப் பற்றி பாரசீக மொழியில் ஒரு நான்கு பக்கப் புத்தகமேனும் எழுதப்படவில்லை. ஆனால் அவர்களைப் பற்றி ஒரு பிரெஞ்சுக்காரர் எழுதியுள்ளார்.

''அறிதல், பேசுதல் என்பவற்றின் படித்தரம் முடிந்துவிட்டது; இது செயல்படுவதற்கான நேரம்'' என நாம் உரிமை கொண்டாடுவது எவ்வாறு என்பதை யானறியேன். செயல்படுவதற்கான நேரம் இதுவல்ல என்று நான் கூறமாட்டேன். ஆனால் இவை யாவும் சேர்ந்து நடக்க வேண்டும். ஏனெனில் நாயகம் (ஸல்) அவர்கள் தம்முடைய வாழ்க்கையினை செயற்படுவதற்கு மட்டும் எனவும், பேசுவதற்கு மட்டும் எனவும் இரண்டாகப் பிரித்ததேதே இல்லை. ''நாம் அதிகம் பேசி விட்டோம்; இனி ஒருபோதும் பேசவே கூடாது என்று கூறுவது சரியன்று. ஆக நாம் முறையிட்டுள்ளோம். இதனையும், முனகலையும் அப்பால் தள்ளி வைத்து விட்டு ஒரு விஞ்ஞானபூர்வமான வழியில் நாம் எமது வேதனைகளையிட்டுப் பேசவேண்டும். எமது வேலை, எமது செயற்பாடு, எமது சிந்தனை என்பன நாம் பின்பற்றும்

சிந்தனைப் பிரிவின் அடிப்படையிலேயே அமைய வேண்டும். நாம் அலி (ரலி) எம் மாதிரியான மனிதர் என்பதை அறிய வேண்டும். நாம் அபூதர் (ரலி), சல்மான் (ரலி) அவர்களைப் பற்றியும், நாயகம் (ஸல்) அவர்களினதும், அலி (ரலி) அவர்களினதும் ஏனைய நண்பர்களைப் பற்றியும் நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

துரதிஷ்டவசமாக மார்க்க ரீதியில், அல்லது மானுட ரீதியில் இவர்களைப் பற்றிப் படிக்க, தரமான புத்தகங்கள் இல்லாமல் உள்ளன. கிடைப்பனவும் மொழி பெயர்ப்புகள் மூலமே கிடைக்கின்றன, நாம் இன்னும் அவர்களைப் பற்றி எழுத வேண்டியவர்களாகவே உள்ளோம்.

தற்காலத்தில் அல் குர்ஆனை அறிந்த ஒருவர் சிறந்தவர் என்றே அழைக்கப்படுகின்றார்; வித்துவான் என்றல்ல. அதற்கப்பால் ஒரு படித்தரத்திலேயே வித்துவான்கள் உள்ளனர். சிறந்தவர் எனப்படுபவர், அல் குர்ஆனையும், இஸ்லாமிய வரலாற்றையும், நாயகம் (ஸல்) அவர்களையும் அறிந்தவரே! இவர்கள் அல் குர்ஆனை விளக்குகின்றனர்; நடைமுறைப்படுத்துகின்றனர். சிறந்தவர் எனப்படும் இவர்கள் இஸ்லாத்தின் வித்துவான்களுக்கு அடுத்த இடம் வகிப்பவர்கள் என்று கருத இடமுண்டு. இதே வழியில் நோக்குவோமாயின் நாயகம் (ஸல்) அவர்களும், அலி (ரலி), அபூதர் (ரலி) ஆகியவர்களும் இஸ்லாத்தின் சிறந்தவர்களிடையே தான் இருந்தனரேயன்றி வித்துவான்களுடன் அல்ல.

ஆக, எம்மை எவ்விடயம் துன்புறுத்துகின்றதோ அதுபற்றி சரியாக விஞ்ஞானபூர்வமாகப் பேசுவதும், ஆராய்வதுமே எமக்குள்ள அவசரமான கடமை என நாம் நம்புகின்றோம். இஸ்லாமிய நாடுகளில் சமூக மறுமலர்ச்சிக்காக உழைத்தவர்கள் அடைந்த துன்பங்கள் ஒன்றில் பயனளிக்கவில்லை; அல்லது குறைவாகவே பயனளித்துள்ளன. செயற்படும்போது எது தேவை என்பதை அவர்கள் அறியாததே இதற்குக் காரணமாகும். எது தேவை என்பதைப் புரியாத வரை, என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடியாது. இது நிச்சயம்.

ஆகவே எமது முதற் கடமை எமது மார்க்கத்தினையும், எமது சிந்தனைப் பிரிவையும் அறிவதாகும். நூற்றாண்டு கால

மாக இம்மார்க்கத்தினை நாம் பின்பற்றுபவர்களாக இருந்தும் துரதிஷ்டவசமாக இப்போது தான் அது பற்றி அறிந்துகொள்ள ஆரம்பிக்கின்றோம்.

நான் எனது நேற்றைய உரையில் குறிப்பிட்டது போல் இஸ்லாத்தினை அறிந்து கொள்ள பல வழிகள் உள்ளன. ''அல்லாஹ்வை அறிந்து அந்த அறிவினை ஏனைய தெய்வங்களின் தன்மைகளுடன் ஒப்பிடுதல்'' என்பது அவற்றில் ஒரு வழியாகும். அல்லது நாம் அல் குர்ஆனை அறிந்து கொண்டு அதனை ஏனைய வேத நூல்களுடன் ஒப்பிடலாம். இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களின் ஆளுமையை அறிந்து கொண்டு அதனை நீண்ட மானுட வரலாற்றுக் காலமாகத் தோன்றிய ஏனைய மறுமலர்ச்சியாளர்களுடன், சிறந்த மனிதர்களுடன் ஒப்பிடலாம். அல்லது சிறந்த, அறிவாளிகளான மனிதர்களை ஏனைய வேதங்களில் இருந்த அப்படியானவர்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

இஸ்லாம் தனிமனித, சமூக ரீதியாக மானுடவியலுக்குப் புத்துயிரூட்டுகின்றது. அதனை அறிந்து கொள்வது இன்றைய புத்திஜீவிகளின் கடமையாகும். இஸ்லாத்தின் பணி மானிடவர்க்கத்தின் எதிர்காலத்தினை நெறிப்படுத்துவதாகும். மாற்றீடு செய்யப்பட முடியாத ஒரு கடமை இது என புத்திஜீவிகள் நோக்க வேண்டும். கல்வியின் எத்துறையினராயினும் சரி அவர்கள் இம்மார்க்கத்தின் மீதும் அதன் பிரபலமான தனிமனிதர்கள் மீதும் எக்கோணத்திலாயினும் ஒரு சிறந்த பார்வை செலுத்த வேண்டும். இஸ்லாம் பல பரிமாணங்களையும், தோற்றப்பாடுகளையும் கொண்ட ஒரு மார்க்கமாகும். ஒவ்வொருவரும் தாம் சார்ந்த கல்வித்துறையுடன் சம்பந்தமுடைய பகுதிகளை அங்கு காணலாம்.

எனது கல்வித்துறை மார்க்க சமூகவியல் (Sociology of Religion). நான், அல் குர்ஆனின் உள்ளடக்கத்தில் இருந்து கொள்ளப்பட்டதும், ஊகிக்கப்பட்டதுமான கலைச்சொற்களை உபயோகித்து இஸ்லாத்தின் அடிப்படையில் ஒரு வகையான மார்க்க சமூகவியலைத் தொடுக்க முனைந்துள்ளேன். எனது கல்வித் துறையில் நான் கற்பனை கூடச் செய்திராத புதிய பிரச்சினைகள் தோன்றியுள்ளன. உதாரணமாக இஸ்லாத்தினையும், குர்-ஆனையும் கற்றதன் பயனாக வரலாறு, சமூகவியல் என்பவற்றின் விஞ்ஞானபூர்வமான யூகங்கள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் பிரதிபலிப்பதை நான் காண்கின்றேன். அல் குர்ஆனை

ஒரு தத்துவஞானமாக பிரித்தறியும் போது அல்லது விளக்கும் போது அல்லது நாயகம் (ஸல்) அவர்களது கொள்கைகளை அறிய இன்றைய விஞ்ஞானத்தை உபயோகிக்கும் போது அல்லது அரசியல், சமூக, மனோதத்துவ, அற முறைகளை அவர்கள் எவ்வாறு சமூகத்திடம் முன்வைத்தார் என்பதை அறியும் போதும் இது ஒரு நேர்மாறாகவே உள்ளது. இல்லை; இப் பிரச்சினை இதுவன்றி வேறொன்றாக உள்ளது. உண்மையாக நான் அல் குர்ஆனில் இருந்து வரலாறு, சமூகவியல் என்பவற்றின் பல புதிய பிரச்சினைகளை ஊகித்தறிந்துள்ளேன். இஸ்லாமும், அல் குர்ஆனும் எனக்கு அடிக்கருத்தினைத் தந்தன; ஆனால் நான் வரலாறு, சமூகவியல், மானுட விஞ்ஞானம் என்பவற்றுடன் தொடர்புடைய புதிய விடயங்களைக் கண்டுள்ளேன். அவற்றின் மீது நான் தொடர்ச்சியான ஆராய்ச்சி செய்து முக்கியமான சிலவற்றை உணர்ந்து ஒரு நிச்சய நிலைக்கு வந்துள்ளேன்.

அல் குர்ஆனின் உதவியுடன் நான் விஞ்ஞானம் கவனித்துப் பார்த்திராத சில முக்கிய பிரச்சினைகளை இன்றைய மானுட விஞ்ஞானத்தில் கண்டுள்ளேன். ஒன்று நாட்டை விட்டு வெளியேறுதல் (ஹிஜ்ரத்) மீதானது. எனது ''முஹம்மது (ஸல்) நபிமார்களின் முத்திரை'' என்ற உரையில், முற்று முழுதாக வரலாற்று ரீதியிலான பார்வையில் ஓர் இனம் ஓரிடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு இடம் பெயர்தல் சம்பந்தமான வினா ஆராயப்பட்டுள்ளது. அல் குர்ஆனை நோக்குகையிலும், இடம் பெயர்தல், இடம் பெயர்ந்தவர்கள் (நாயகம் (ஸல்) அவர்களுடன் மக்காவிலிருந்து மதீனாவிற்கு ஹிஜ்ரத் சென்றவர்கள்) பற்றி படிக்கும் போதும் பொதுவாக நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையினைப் படிக்கும் போதும், ஹிஜ்ரத் - இடம் பெயர்தல், என்பது முஸ்லிம்கள் நினைப்பதை விடவும் நேர்மாறாக உள்ளதை நான் கண்டுள்ளேன். இது ஒரு சாதாரண வரலாற்று விபத்தோ அன்றி சம்பவமோ அல்ல. மக்காவில் தடை விதிக்கப்பட்டிருந்த ஒரு குழுவினரை நாயகம் (ஸல்) அவர்கள் எதியோப்பியா, மதீனா ஆகிய இடங்களுக்கு ஹிஜ்ரத் செய்யுமாறு பணித்தார்கள் என்று முஸ்லிம்கள் கருதுகின்றனர்.

வரலாற்று வரைவிலக்கணங்களின் படி ஒரு புராதன இனம் புவியியல், அரசியல் காரணங்களுக்காக ஓர் இடத்திலிருந்து இன்னோர் இடத்திற்கு இடம் மாறுதலே 'வெளியேறுதல் (ஹிஜ்ரத்)' எனப்படுகின்றது. முஸ்லிம்களினதும், நாயகம் (ஸல்)

அவர்களினதும் வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்திய ஒரு சம்பவம் என்று இஸ்லாம் இதனைக் (ஹிஜ்ரத்) கருதுகின்றது.

ஹிஜ்ரத் - வெளியேறுதல் - என்பது ஓர் ஆழமான தத்துவ, சமூகக் கொள்கையாகும். சரித்திரத்தை மீட்டும் போது நான், ''ஹிஜ்ரத் ஒரு அதிமுக்கியமானதும், அற்புதமானதுமான கொள்கையாகும்'' எனக் கண்டுள்ளேன். அது ஒரு வரலாற்றாசிரியன் சாதாரணமாக நினைப்பது போன்ற ஒன்றல்ல. ஹிஜ்ரத் சம்பந்தமான விளைவுக்கு சரித்திரத்தின் தத்துவஞானிகள் கூட கவனம் செலுத்தியதில்லை. இப்போது நான் ஹிஜ்ரத் என்பது முழு வரலாற்றிலும் செல்வாக்குப் புரியும் ஒரு காரணி என்றே கூறுகின்றேன்.

சரித்திரத்தில் நாம் காணும் 27 நாகரீகங்களும் வெளியேறுதலின் (ஹிஜ்ரத்) விளைவுகளே! இவ் விதிக்கு ஒரு விதிவிலக்கும் கிடையாது. வரலாற்றுச் சான்றுகளின் படி ஒரு புராதன இனம் தான் வாழ்ந்த இடத்தை விட்டு வெளியேறியே நாகரீகமடைந்துள்ளது; ஓர் உயர்ந்த கலாசாரத்தை உருவாக்கிக் கொண்டுள்ளது.

நான் இவ்விடயத்தை யூகித்தே அறிந்துள்ளேன். அன்றியும் இதற்கு வரலாற்றில் அல்லது சமூகவியலில் எதுவித ஆதாரக் குறிப்பும் கிடையாது. இந்த எனது அனுமானமானது இஸ்லாத்திலிருந்தே - அதாவது குர்ஆனில் ஹிஜ்ரத் பற்றிக் குறிப்பிடப்படும் அத்தியாயத்திலிருந்து தொடர்ச்சியான மீட்டலிலேயே பிறந்தது.

மிக நவீன அமெரிக்க நாகரீகத்திலிருந்து மிகப் புராதன சமர் (Sumer) நாகரீகம் வரை உலகின் அனைத்து நாகரீகங்களும் தொடரான வெளியேறல்களினால் தான் உருவாகின. அதாவது – ஒரு புராதன இனம் தனது சொந்த இடத்திலேயே தரிக்குமாயின் அது புராதன இனமாகவே இன்றும் இருக்கும் என்பதே இதன் பொருளாகும். வெளியேறுதல் இடம்பெற்று புதிய ஓர் இடத்தில் குடியேறியதும் 'நாகரீகம்' எனப்படுவதினை அவர்கள் அடைந்து கொள்வர். ஆகவே எல்லா நாகரீகங்களும் புராதன இனங்களின் வெளியேறுதலின் விளைவுகளேயாகும்.

நான் அல் குர்ஆனின் ஊடாகவே பல விஞக்களை விளங்கிக் கொண்டேன். ஒரு புதிய தோற்றத்தில் வரலாற்று, சமூகவி

யல் பிரச்சினைகளை நோக்கவும், தெளிவான விளக்கத்தினைப் பெறவும் அல்குர்ஆனில் பொதிந்துள்ள தகவல்கள் எனக்கு உதவியுள்ளன. இதனாலேயே நான் அல்குர்ஆனின் விதிகளை உபயோகிக்கும் ஒரு முறையினை அடைந்து கொண்டேன். இவ்விதமாக நவீன விஞ்ஞானம், மானுட விஞ்ஞானம் என்பவற்றிற்குப் பிரயோகிக்கக்கூடிய பலவிதமான அணுகுமுறைகளை ஒருவர் கண்டு கொள்ளலாம்.

சமூக மாற்றங்களின் அடிப்படைக் காரணியை கண்டுகொள்வதே வரலாறு, சமூகவியல் என்பவற்றில் உள்ளதும், குறிப்பாக இஸ்லாமிய சமூகவியலில் உள்ளதுமான பாரிய பிரச்சினையாகும். சமூகங்களின் மாற்றங்களுக்கு அல்லது அவற்றின் தோல்வி, அழிவு என்பவற்றிற்கு எது முக்கிய காரணியாய் அமைகின்றது? ஒரு சமூகம் ஒரு சாதகமான மாற்றத்தை அடைவதற்கும், அவ்வாறே ஒன்றிரண்டு நூற்றாண்டுகளில் அதன் பௌதீக, ஆத்மீக அமைப்பும், உள்ளடக்கமும் மாறுவதற்கும், அனைத்து தனிமனித, சமூகத் தொடர்புகள் மாறுவதற்கும் எது காரணியாய் அமைகின்றது?

இது நூற்றாண்டுகளாகத் தொடர்கின்ற ஒரு பிரச்சினையாகும். கடந்த 110 வருடங்களாக சமூகவியல் வரலாற்றில் இவ்விடயம் அப்பட்டமாக அதே வேளை கவனமாக ஆராயப்படுகின்றது. ''மானிட சமூகத்தின் மாற்றங்களையும், மாறுதல்களையும் இயக்கும் அடிப்படையான சரித்திர மோட்டார் (சக்தி) எது?'' என்பதே எப்போதும் முன்வைக்கப்படும் வினாவாகும்.

ஒவ்வொரு சிந்தனைப் பிரிவும் பிரச்சினையின் ஒரு தோற்றப்பாட்டினை வலியுறுத்தும் போது, சமூக விஞ்ஞானம் இவ்விடத்தில் இயங்க மறுக்கின்றது. சில சிந்தனைப் பிரிவுகள் வரலாற்றை நம்புவதில்லை; அவை வரலாற்றினை ஒரு விவரணத் திரட்டு என்றே கருதுகின்றன. மேலும் அவை வரலாற்றினை உபயோகமற்ற ஒன்று என்றும் கருதுகின்றன. சமூகவியலுக்கான ஒரு தரநிர்ணயமாக இக்குழுக்கள் எதுவித விதியையும், தரவையும் ஏற்பதில்லை.

சமூகவியல், மானுட விஞ்ஞானம், என்பவற்றின் தத்துவஞான விடயத்தில் உண்மையிலேயே எதிர்க்கருத்துடைய ஒருவித விஞ்ஞானக் குழப்ப நிலையே இன்று நிலவுகின்றது. மாற்றங்கள், மாறுதல்கள், புரட்சிகள் என்பன சமூகத்தல் இடம்

பெறும்போது அவற்றிற்கான அடிப்படைக் காரணி விபத்து அல்லது தற்செயல் என்றே விஞ்ஞானம் கருதுகின்றது.

உதாரணமாக அரபிகள் ஈரானைத் தாக்கியபோது ஈரான் தற்செயலாகவே தோற்கடிக்கப்பட்டது. ஈரானியர்கள் முஸ்லிம்களாக மாறிய பின்னர் செங்கிஸ்கான் ஈரானைத் தற்செயலாகத் தாக்கினுர்; ஈரானிய அரசாங்கம் பலவீனமாக இருந்ததால் ஈரானிய வாழ்க்கை முறையையும், இஸ்லாத்தினையும், கொண்டிருந்தும் கூட ஈரான் தோற்கடிக்கப்பட்டது. இவை எல்லாம் இடங்களை மாற்றுகின்றன. இப்படியான முக்கிய விடயங்கள் எல்லாம் தற்செயல்கள் என்றே கருதப்பட்டுள்ளன.

மற்றக் குழுவினர் உலகாய வாதிகள்; இவர்கள் வரலாற்றின் ஒரு கூட்டுமொத்த தோற்றப்பாட்டினை நம்புகின்றனர். இவர்கள், அன்றிலிருந்து இன்று வரை, வரலாறு, சமூகம் என்பன ஒரு மரத்தை ஒத்தன என்று நம்புகின்றனர். இம் மரம் ஆரம்பத்தில் ஒரு விதையாக இருந்தது. தனது சுய விருப்பமின்றியே அது பிளந்து நிலத்திற்கு வெளியே வளர்ந்தது; வேர்களைப் பதித்தது; பின்னர் தண்டையும், இலையையும் உருவாக்கிக் கொண்டது. அது தொடர்ந்து வளர ஆரம்பித்து இன்று ஒரு பெரிய விருட்சமாகி விட்டது. வசந்த காலங்களின் ஆரம்பத்தில் பூக்களையும், பழங்களையும் தரும் கடப்பாடுடையதாகி விட்டது. அது இன்னும் விஸ்தரிக்கவும், அழியவும் கடமைப்பட்டுக் கொண்டது.

மேலும் இக் குழுவினர், ''சரித்திர காலமாக மானிட சமூகங்கள் அவற்றில் இருப்புக் கொண்டிருந்த இயற்கைச் சட்டங்கள் போன்ற உறுதி செய் சட்டங்களின் விளைவுகளினுலேயே இதுவரை தாக்குப் பிடிக்கின்றன'' என்றும் நம்புகின்றனர். எனவே, தனி மனித நம்பிக்கைகள் அவர்கள் வாழும் சமூகத்தின் தலைவிதியில் எவ்விதத்திலேனும் தலையீடு செய்ய மாட்டா. இயற்கைச் சட்டங்களின் விளைவுகளில் இருந்து வளரும் ஓர் இயற்கைத் தோற்றமே சமூகம் எனப்படுகின்றது.

மூன்ருவது குழுவினர், பாஸிஸவாதிகள் (Facists), நாஜிகள் (Nazis) போன்ற தனித்தன்மையுடையவர்களே வரலாற்றினை நெறிப்படுத்துகின்றனர் என்று நம்புகின்றனர். நாயகம் (ஸல்) அவர்களின் சரிதையை எழுதிய கர்லைல் (Karlyle), எமர்ஸன் (Emerson) போன்ற மேதைகளும் கூட இக்குழுவினைச்

சேர்ந்தவர்களே! மனிதப் பண்பியலில் உள்ள சாதாரண உபகரணங்களே சட்டங்கள் என்றும் அவை சமூகத்தில் எதுவித பாதிப்பையும் ஏற்படுத்துவதில்லை என்றும் இவர்கள் நம்புகின்றனர். இவர்களின் சிந்தனைப் போக்கின்படி ஒரு சராசரி மனிதனுக்கோ அல்லது சராசரிக்கும் கீழேயுள்ள ஒருவருக்கோ சமூக மாற்றங்களில் எதுவித பங்கும் கிடையாது. அவர்கள் மிகச் சாதாரண உபகரணம் போன்றே கவனிக்கப்படுகின்றனர். சமூக மறுமலர்ச்சி வளர்ச்சி அல்லது வீழ்ச்சியின் காரணிகளானவர்கள் அச் சமூகத்தின் சிறந்த மனிதர்களே'!

எமர்சன் கூறுகின்றார், ''என்னிடம் பத்து சிறந்த மனிதர்களை எனக்குக் காட்டுங்கள். நான் உங்களுக்கு மனிதப் பண்பியலின் சரித்திரத்தை ஒரு புத்தகத்தையும் வாசிக்காமல் உங்களுக்கு நான் சொல்வேன். என்னை இஸ்லாத்தின் தூதருக்கு (ஸல்) அறிமுகம் செய்து வையுங்கள். நான் இஸ்லாத்தின் சரித்திரத்தையேகூறுவேன். எனக்கு நெப்போலியனை அறிமுகம் செய்யுங்கள். நான் நவீன ஐரோப்பாவின் சரித்திரத்தை பிரகடனம் செய்கின்றேன்'' என்று.

இக் கருத்துகளின் படி ஒரு சமூகத்தின் அல்லது மனிதப் பண்பியலின் தலைவிதியானது அச் சமூகத்தின் தலைவர்களாகத் திகழும் பிரசித்தி பெற்ற மனிதர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளது. எனவே சமூகங்களின் எழுச்சி அல்லது வீழ்ச்சி என்பன மக்களிலோ அல்லது சூழலின் உறுதி செய் சட்டங்களிலோ அல்லது தற்செயல் விளைவுகளிலோ தங்கி நிற்பதில்லை. மாறாக சமூகங்களின் தலைவிதியும் சில வேளைகளில் மனிதப் பண்பியலின் தலைவிதி மாற்றங்களையும் காலத்துக்குக் காலம் சமூகங்களில் தோன்றும் பிரசித்தி பெற்ற மனிதர்களின் கரங்களிலேயே தங்கியுள்ளன.

நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி விபரிக்கும் போது கர்லைல் பின்வருமாறு எழுதுகின்றார். ''தமது உறவினர்களை மார்க்கத்தின் பால் அழைத்த போது அவர்கள் நிராகரிக்கப்பட்டார்கள். எனினும் பத்தே வயது நிரம்பிய அலி (ரலி) அவர்கள் எழுந்து இவ்வழைப்பிற்கு சாதகமான பதில் அளித்து விசுவாசம் கொண்டார்கள்.'' மேலும் கர்லைல் தமது சிந்தனைப் போக்கின் அடிப்படையை ''இப் பெரிய கரத்தில் பதிக்கப்பட்ட அச் சின்னக் கரம் வரலாற்றின் போக்கையே மாற்றி விட்டது'' என்று கோடிட்டுக் காட்டுகின்றார்.

தமது சமூகங்களின் மாறுதல்களுக்கும், மாற்றங்களுக்கும், வெகுஜனங்களே காரணமானவர்கள் என்று நம்புகின்ற எந்தவொரு சிந்தனைப் பிரிவும் கிடையாது; அது பழையதோ, புதியதோ ஜனநாயக ரீதியிலானதோ அன்றி வேறு விதமானதாயினும் சரியே!

மக்களின் பங்களிப்புடனான ஓர் அரசாங்கமே மிகச் சிறந்தது என்று ஜனநாயகம் எனும் சிந்தனைப் பிரிவு கருதுகின்றது. ஆனாலும் ஏதென்ஸ் நகரில் ஜனநாயகம் ஆரம்பமானது முதல் இன்று வரை எந்தவொரு சிந்தனைப் பிரிவுமே சமூகத்தில் மாற்றங்களையும், மாறுதல்களையும் ஏற்படுத்தும் பிரதான காரணி மக்களேயாவர் என்று நம்பியதேயில்லை.

''மக்கள் பங்களிப்புச் செய்த, வாக்குப் பலமளித்த அல்லது தெரிவு செய்த அரசாங்கமொன்றே மக்களை ஆளவும் ஒரு நிருவாக அமைப்பினை உருவாக்கவும் உள்ள மிகச் சிறந்த வழியாகும்.'' இதுவே அதிசிறந்த ஜனநாயக போக்குடைய சமூகவியலாளர்களின் நம்பிக்கையாகும்.

எப்படியிருந்த போதிலும் சமூக மாற்றங்கள், மாறுதல்கள் என்பவற்றின் அடிப்படைக் காரணி மக்களே என அவர்கள் கருதுவதே இல்லை. ஆனால் இவற்றை விடவும் அவர்கள் ஒன்றில் உறுதி செய்போக்குகளை அல்லது பிரசித்தி பெற்ற மனிதர்களை அல்லது தற்செயல்களினை அல்லது இறை விருப்பின் சாதகங்களினையே மாற்றங்களின் பிரதான காரணியாகக் கொள்கின்றனர்.

பிரசித்தி பெற்ற மனிதர் பக்தித் தோற்றத்தை (Personility-cult theory) பின்பற்றுபவர்களை இரு குழுவினராகப் பிரிக்கலாம். இதில் ஒரு குழுவினர் புத்தர், மூஸா (அலை), ஈஸா (அலை) போன்ற பிரசித்தி பெற்றவர்களே சமூகத்தினை மாற்றியமைக்கின்றனர் எனக் கருதுகின்றனர். மற்றக் குழு ''முதலில் ஒரு பிரசித்தி பெற்றவர் தோன்றுவார், அவர் பின்னர் நிபுணர்கள், மேதைகள், மேல்மட்டத்தினர் போன்ற ஒரு கூட்டத்தினரால் பின்பற்றப்படுவார், இவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு ஒரு குழுவினை அமைப்பர்'' என நம்புகின்றது. இவர்கள் 'உயர்ந்தோர்' என அழைக்கப் படுவர்; இவர்கள் தமது நோக்கங்களை நோக்கி சமூகத்தை வழி நடத்துவர். இவர்களே ''உயர்ந்தோர் வணக்கவாளிகள்'' எனப்படுபவர்களாவர்.

ஆனால் இஸ்லாமும், குர்ஆனும் வேறொரு கருத்தைக் கொண்டுள்ளன. இஸ்லாத்தில் அதி பிரசித்தி பெற்றவர் எனப்படுபவர் நபியேயாகும் என்பது ஒரு விதி. சமூக, வரலாற்று மாற்றங்களினதும், மாறுதலினதும் அடிப்படைக் காரணி பிரசித்தி பெற்ற மனிதர்களே என்று இஸ்லாம் நம்பியிருக்குமாயின், எல்லா நபிமார்களும் விசேடமாக இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களையும் சமூக மாற்றம் மாறுதல்களின் பிரதான காரணியாக முஸ்லிம்கள் கருதியிருப்பர்.

ஆனால் இது அதனை விடவும் வேறுபட்டதொன்று. இஸ்லாத்தின் தூதரின் தகுதிகளை விடவும், அவருடைய தூதினை விடவும் இது கொஞ்சம் அதிகமானது. தூது கொண்டுவருதல் பற்றி அல் குர்ஆனில் தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளது. தூதினைப் பரப்பும் பொறுப்பு அவரைச் சார்ந்தது. சுப செய்திகளின் கட்டியக்காரர் அவரே! மக்களை தம்முடைய வழியில் செலுத்த முடியாத போதும், மக்கள் அவரின் சொற்களைக் கேட்காத போதும் அவர் குழப்பமடைவதும் உண்டு.

அல்லாஹ் நபியை நோக்கி, பல திருவசனங்களில் ''உம்முடைய பணி தூதினைப் பரப்புவது மட்டுமே, நீர் பயப்பட வேண்டாம், மக்களுக்கு செய்திகளைக் கொடும், மேலும் அவர்களுக்கு வாழும் வழியையும் காட்டும். அவர்களின் முன்னேற்றத்திற்கு நீர் பொறுப்பாளியாக மாட்டீர்'' என்று மீண்டும் மீண்டும் விளக்குகின்றான்.

வரலாற்று மாற்றத்திற்கும், மாறுதலுக்கும் பிரதான காரணி நபி (ஸல்) அவர்களே என்று அல் குர்ஆன் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் மக்களுக்கு சத்திய மார்க்கத்தையும், வாழும் வழியையும் தெரியப்படுத்தும் ஒரு தூதுவராகவே அறிமுகப்படுத்தப்பட்டுள்ளார். அவருடைய பணி இங்கு முடிவுறுகிறது. இச் சத்திய மார்க்கத்தினைத் தெரிவு செய்து கொள்வதோ, விடுவதோ அல்லது நேர்வழி செல்வதோ, வழி கெடுவதோ அது மக்களைப் பொறுத்தது.

இம் மார்க்கத்தில் தற்செயல் தேற்றத்திற்கு (Accident theory) இடம் கிடையாது. ஏனெனில் எல்லா விவகாரங்களும் இறைவனின் பொறுப்பிலேயே உள்ளன. ஆகவே ஒரு வித காரணியும் கிடையாத அல்லது படைப்பின் எவ்வித குறிக்கோளுமற்ற சம்பவம் எனக் கருதப்படும் ''தற்செயல்'' இயற்கை

யில் அல்லது மானுட சமூகத்தில் கற்பனைக்கு அப்பாற்பட்டதா கின்றது. அல் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய தூதுவர் களும் அல்லது பிரசித்தி பெற்றவர்களும் கூட ஒருவித நம்பிக் கையற்ற உணர்வுகளுடனேயே உருவாக்கப்பட்டுள்ளனர். சரியா னவர்கள், தூய்மையானவர்கள் என்று அது இவர்களைப்பற்றி பேசிய போதிலும், இவர்களை அவர்களின் சமூக மாற் றத்தினதும், மாறுதலினதும் பிரதான காரணி என கணிக்க வேயில்லை.

பொதுவாக எந்தவொரு சிந்தனைப் பிரிவிலும், மார்க்கத்தி லும் அவை குறிப்பிட்டுப் பேசும் மக்களே அச் சமூக மாற்றத் திற்கு அடிப்படையான, சக்திமிக்க காரணியாவார்கள். இதன் படி அல் குர்ஆனில் பல்வேறு இடங்களில் மக்களே (அல்-நாஸ்) குறிப்பிடப்படுகின்றனர். நபிமார் மக்களுக்குத் தூதைத் தெரி யப்படுத்தவே அனுப்பப்படுகின்றனர். அவர்கள் மக்களிடம் பேசுவார்கள். மக்களால் கேள்வி கேட்கப்படுவார்கள். புலன் விசாரணை செய்யப்படுவார்கள். மக்களின் முன்னேற்ற மாற்றக் காரணி அவர்களே! மக்கள் சமூகத்திற்கும், வரலாற்றிற்கும் பொறுப்பானவர்கள்.

மக்கள் (அல்-நாஸ்) என்பது பெறுமதிமிக்கதொரு சொல். இதற்கு மிக நெருங்கிய இன்னொரு சொல் வெகுஜனம் (Mass-துடே) என்பதாகும். சமூகவியலில் வெகுஜனம் எனப்படுவது ஏனைய மானுடக் குழுக்களில் இருந்தும் பிரித்தறியக் கூடியதும், எதுவித வர்க்க மேன்மையோ அல்லது குறிகளோ அற்ற மக்க ளின் தொகுதியாகும். ஆகவே வெகுஜனம் எனப்படுவோர் அவர்களின் சமூகத்தில் விசேட வர்க்க ரீதியான கணிப்புகளற்ற ஓர் அமைப்பு அல்லது குழு எனப்படுகிறது.

மானுட படைப்பு (Human being-இன்ஸான்) எனும் பத மும், மானுட வர்க்கம் (Mankind-பஷர்) எனும் பதமும் மக்க ளையே குறிக்கின்றன. ஆயினும் மானுட படைப்பு என்பது அவர்களின் அற (Moral) தன்மைகளையும், மானுட வர்க்கம் என் பது அவர்களின் மிருகக் குணங்களின் உள்ளடக்கலையும் குறிக் கின்றன. வெகுஜனம் எனும் பதம் சாதாரணமாக எதுவித மேலதிக வகைப்படுத்தலுமின்றி மக்களைக் குறிக்கின்றது.

இங்கே ஒரு விடயம் அனுமானிக்கப் படுகிறது. ''மக்களே சமூகம். அதாவது - சமூகத்தினதும், வரலாற்றினதும் அடிப்

படைக் காரணி மக்களே என்றும், அதுபோல் சமூகத்திலும், வரலாற்றிலும் உள்ள பிரிவுகளுக்கு பொறுப்பானவர்கள் மக்களே என்றும் கருதும் ஓரேயொரு சிந்தனைப் பிரிவு இஸ்லாமேயாகும். அவர்கள் தெரிவு செய்யப்பட்டவர்களோ அல்லது நியத்ஷே (Nietzsche) குறிப்பிடும் பிரபுக்களோ அல்லது பிளேட்டோ (Plato) குறிப்பிடும் உயர்குலத்தோரோ அல்ல. அது கார்லைல் (Carlyle), எமர்சன் (Emerson) ஆகியோர் குறிப்பிடும் மிகப் பிரசித்தி பெற்றவர்களோ அல்லது அலக்ஸிஸ் காரல் (Alexis Carrel) குறிப்பிடும் தூய இரத்தமுடைய மக்களோ அல்லது மதகுருமாரோ அல்லது மேதாவிகளோ அல்ல. மாறாக மக்களின் தொகுப்பேயாகும்.

இவ்விடயத்தினை படிப்பதும், அதனை வேறு சிந்தனைப் பிரிவுகளுடன் ஒப்பிடுவதும் முக்கியமானது. யாரை விழித்து ஏனைய சிந்தனைப் பிரிவுகள் பேசுகின்றன? சில பிரிவுகள் படித்தவர்களுடனும், புத்திஜீவிகளுடனும் பேசுகின்றன. இன்னுமொன்று மேன்மக்களுடனும், தெரிவு செய்யப்பட்டவருடனும் பேசுகின்றது. இன்னுமொன்று உயர் குழுவினருடனும், இனத்தினருடனும் பேசுகின்றது. இன்னுமொன்று உயர்ந்த மனிதருடன் பேசுகின்றது. மேலும், இன்னுமொரு சிந்தனைப் பிரிவு தொழிலாளர் அல்லது பாட்டாளிகள் போன்ற சமூகத்தின் ஒரு விசேட வகுப்பினருடன் பேசுவதைக் கூட நாம் காணக் கூடியதாய் உள்ளது.

ஆனால் இஸ்லாத்தில் இப்படியான தனிச் சிறப்புமிக்க எது வித குழுவும் கிடையாது. விசேட தன்மை, தோற்றம், வர்க்கம், மேன்மை அல்லது வேறு ஏதாவது வகைப்படுத்தலுமற்ற மக்களே சமூக மாறுதல்களின் அடிப்படைக் காரணியாகும்.

அல் குர்ஆன் மக்களை விழித்துப் பேசுவதனைக் கொண்டு இன்னொரு முக்கிய விடயத்தையும் அனுமானிக்கலாம். அதாவது மக்களே அடிப்படை நோக்கங்களுக்குப் பொறுப்பானவர்கள். அதே வேளை பிரசித்தி பெற்றோர், வழக்காறு, தற்செயல், வெகுஜனம் என்பவர்கட்கூடாக சமூகத்தை சீர்செய்யக்கூடிய பிரதான சக்தியும் மக்களேயாகும்.

ஆகவே பிரசித்தி பெற்றோர், வழக்காறு, தற்செயல், வெகுஜனம் என்பவையே சமூக மாற்றம், மாறுதல் என்பவற்றின்

அடிப்படைக் காரணியாக அமையும் நான்கு பெரும் சக்திகள் என்று நாம் கூறலாம்.

வழக்காறு என்பது இஸ்லாம், குர்ஆன் என்பவற்றிலிருந்து அனுமானிக்கப்படுகின்றது. சமூகத்திடம் ஒரு மறுக்க முடியாத பிறப்பிடம் உள்ளது. அல் குர்-ஆன் குறிப்பிடுவது போல் விசேட இயல்பு என்னும் ஓரே வழி, ஒரே கொள்கை சமூகத்திடம் உள்ளது. உண்மையில் மாற்ற முடியாத குறித்த சட்டங்கள் எல்லா சமூகங்களிடமும் உள்ளன. சமூகம் என்பது ஓர் உயிர்ப்பிராணி போன்றது. எல்லா சீவராசிகளுமே உறுதியான, மாற்ற முடியாத, விஞ்ஞான பூர்வமான சட்டங்களைப் பின்பற்றுகின்றன. இதனால் தான் சமூகத்தின் அனைத்து மாறுதல்களும், மாற்றங்களும் குறித்த வழக்காறுகளின் மேல் கட்டப்பட்டுள்ளன.

இங்கே இஸ்லாம் சமூகம், வரலாறு என்பவற்றின் உறுதியான ஒரு விளக்கத்தை அணுகுவதாகத் தெரிகின்றது. ஆனால் இஸ்லாம் இத்தோடு நின்று விடுவதில்லை. அது மானுட சமூகம், தனிமனிதன் ஆகிய இரண்டையும் அவற்றின் தலைவிதிக்கு பொறுப்பாளிகள் என்றே வலியுறுத்துகின்றது.

''அவர்கள் செய்த நல்வினைகள் அவர்களுக்கே! நீங்கள் செய்த நல்வினைகள் தான் உங்களுக்கு.'' – அல் குர்ஆன் 2:134

''நிச்சயமாக மனிதர்கள் தாமாகவே தமது நிலையை மாற்றிக் கொள்ளாத வரை அல்லாஹ் அதனை மாற்றி விடுவதில்லை.'' – அல் குர்ஆன் 13:11

இவ்விரு திருவசனங்களும் பொறுப்புணர்ச்சியை வலியுறுத்துகின்றன. ''ஒவ்வொரு ஆத்மாவும் அது தேடியவற்றிற்காக வாக்களிக்கப் பட்டுள்ளது.'' இவ் வசனம் ஒவ்வொரு தனிமனிதனினதும் பொறுப்புணர்ச்சியை வலியுறுத்துகின்றது.

படைத்தவன் மீதான கடப்பாடு சமூகம் தனிமனிதன் இரண்டிற்குமே உண்டு. அதே நேரத்தில் அவரவர் தலைவிதியை அவரவரே நிர்ணயிப்பார். இது மட்டுமன்றி இவ்விரு தோற்றப்பாடுகளும் முரண்பாடற்றன. ஆனால் அவை ஒன்றையொன்று பூர்த்தி செய்கின்றன.

இயற்கையில் கூட இதுவே நடக்கின்றது. ஒரு விவசாயி அவனது தோட்டத்திலுள்ள மரங்களில் உள்ள பழங்களுக்கும்,

அங்குள்ள தாவரங்களின் வளர்ச்சிக்கும் பொறுப்பாளியாவான். தாவரங்களில் இருந்து அதி சிறந்த விளைச்சலைப் பெறுவது அவனது பொறுப்பேயாகும். எனவே, உற்பத்தியைப் பொறுத்த மட்டில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு அவனே பொறுப்பாளியாகின்ருன். மறுபுறத்தில் தாவரங்களின் மாற்றங்கள், மாறுதல்கள் என்பவற்றின் அடிப்படையை நிர்ணயிக்க சில விதிகள் உள்ளமையையும் நாம் அறிவோம். இவ் விதிகள் உறுதியானவை; மாற்ற முடியாதவை.

ஆகவே, மானுட படைப்புக்கள், அவர்களின் குறித்த விஞ்ஞான துறைக்கு அல்லது வேலையின் தன்மைக்கு ஏற்ப மாற்ற முடியாத விதிகளை தாவரங்கள் மீதும் உபயோகிக்கலாம். ஒரு விவசாயியால் ஒருபோதும் ஒரு புதிய விதியை இயற்கைக்கென உருவாக்க முடியாது. இயற்கையில் இருப்புக் கொண்டிருக்கும் ஒரு விதியை அழித்துவிடவும் முடியாது. இயற்கையில் இருப்புக் கொண்டிருக்கும் விதிகள் அந்த விவசாயி மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்டுள்ளது. அவனுல் அவற்றை மாற்றவும் முடியாது. அதே நேரத்தில், தாவரவியலில் நிலைநிறுத்தப்பட்ட வழக்கங்களையும், விதிகளையும் விஞ்ஞான உபாயங்கள் மூலம் மாற்றியமைக்கும் சக்தி அவனிடம் உள்ளது. மேலும் இவ்வுபாயங்களை கேள்விக்கு அப்பாற்பட்ட மாற்றங்கள் மீது பிரயோகிக்கவும் அவனுல் முடியும். இருப்பில் இருக்கும் விதிகள் மூலம் ஒரு சராசரிப் பழத்தை சிறந்த ஒரு பழமாக அவன் மாற்றிக் கொள்ளலாம்.

ஒரு சமூகத்தில் மானுட படைப்பொன்றின் கடப்பாடு இது போன்றதேயாகும். அதாவது அல்லாஹ்வின் நியதிகளினுல் உருவாக்கப்பட்ட சமூகம் ஒரு தோட்டத்தைப் போன்றது. இவற்றினூடாகவே அது வளர்கின்றது; வியாபிக்கின்றது. ஆனுல் மானுட படைப்பிற்கு ஒரு பொறுப்பு உள்ளது. அவர் சர்வசாதாரணமாக தற்செயல் கருத்துக்களை அல்லது வரலாற்றின் உறுதிசெய் வாதத்தினை ஏற்றுக் கொள்ள முடியாது. இவற்றை அவர் ஏற்றுக் கொள்வாராயின் அவர் தம்மைத் தாமாகவே பொறுப்புகளிலிருந்தும் விடுவித்துக் கொள்கின்ருர். சமூகத்தின் தலைவிதிக்கு முகங்கொடுக்கையில் ஒருவர் தமது கடப்பாடுகளிலிருந்து அப்பால் ஒதுங்க முடியாது. மாற்றப்பட முடியாத விதிகளாலேவே சமூகம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை அல் குர்ஆன் ஏற்றுக் கொள்கின்றது. அதே நேரத்தில் மானுட படைப்புகளின் பொறுப்புகளை ஒருபோதும் மறுத்

முறைக்கவில்லை. இந்த சிந்தனைப் பிரிவில் மானுடர்களே வழக்காறுகளை அறிந்து, சமூகத்தின் வளர்ச்சிக்கமைய தம்மை மறுமலர்ச்சிப் படுத்தவுமான பொறுப்பு அவர்களுடையதே! எப்படி இது அவர்களின் சுய அறிவினால் நிகழும்?

ஒரு விவசாயிக்கு அவரது வயலின் அபிவிருத்தியிலும், மேம்பாட்டிலும் அதிக பொறுப்பு இருப்பது ஏன்? ஏனெனில் அவரிடம் இந்நியதிகள் பற்றிய அதிக அறிவு உள்ளது. இதன் பயனாக தாவரங்களின் தலைவிதியை மாற்றும் சுதந்திரமும் அவரிடம் உள்ளது. சமூக நியதிகள், விதிகள் என்பவற்றின் மீதான மானுடனின் அறிவும், சமூக மாற்றம், மாறுதல் என்பவற்றில் இருக்கும் பொறுப்பும் மிக உயர்வானது.

ஒரு சமூகவியல் சிந்தனைப் பிரிவாக இஸ்லாம் மார்க்கத்தை நாம் நோக்குவோமாயின், அது சமூக மாற்றங்கள், மாறுதல்கள் என்பன தற்செயல்கள் மீது உருவாக்கப்படவில்லை என்றே நம்புகின்றது. ஏனெனில் சமூகம் ஒரு சீவராசி. அதனிடம் மாற்றப்பட முடியாத விஞ்ஞான, மானுட நியதிகள் உள்ளன. சமூகத்தின் விதிகள், நியதிகள் என்பவற்றில் பங்களிப்புச் செய்வதனால், அதனை கட்டியெழுப்பவும், சமூகத்தினதும், தனிமனிதனினதும் ஒளிமயமான எதிர்காலத்திற்கு கட்டியம் கூறக் கூடியதுமான சுதந்திரமான மனவுறுதி மானிடனிடம் உண்டு. மானுடனின் பொறுப்பானது, ''சமூகம் ஒரு சீவராசியே!'' எனும் நம்பிக்கையிலே உருவாக்கப் பட்டுள்ளது. அது விஞ்ஞான விதிகளுக்கு அமையவே பிரதிபலிக்கின்றது. ஆக ஒரு கருத்துடன் பார்க்கையில் மானுட படைப்பு ''மனவுறுதி'' எனப் பொருள்படுகின்றது. இன்னொரு கருத்துடன் பார்க்கையில் நியதி, வழக்காறு எனப்படும் ''சமூகம்'' எனப் பொருள் படுகின்றது. அல் குர்ஆனின் படி வழக்காறுகள் மாற்றங்களின் மீது சக்தியற்றவையாகவே உள்ளன. தனிமனிதன் மீதும், சமூகத்தின் மீதுமான நேரடியான பொறுப்பாளி மானுடனே! ஆகவே மானுடன் இயங்கவும், வேலை செய்யவும் சுதந்திரமானவன். ஆனால், அதே நேரத்தில் அவன் அந்த சுதந்திரத்தை பயன்படுத்துவதற்கு இயற்கையில் இருப்புக் கொண்டிருக்கும் நியதிகளைப் பின்பற்ற கடமைப்பட்டவனாய் இருக்கின்றான்,

ஓர் ஆக்கபூர்வமான சக்தியாக பிரசித்தி பெற்ற ஒருவர் இஸ்லாத்தில் கவனிக்கப் படுவதில்லை. தத்தம் சமூகங்களில் புதிய புதிய வழக்காறுகளைக் கொணர்ந்த நபிமார்கள் கூட பிர

சித்தி பெற்றவர்களாக கவனிக்கப்படுவதில்லை. ஒரு சமூகவியல் பார்வையில், ஏனைய போதகர்களுடனுன - நபித்துவப் பணி தவிர்ந்த - தொடர்பில் நபிமார்களின் சுபாவமானது ''இயற்கையில் ஓர் ஆத்மீக சரம் உள்ளது'' என்பதை அறிந்ததாகவும், விளங்கியதாகவுமே உள்ளது.

இதனாலேயே சமூகத்தில் தமது இலக்குகளை அடைவதற்கு அவர்கள், மானுடரைப் போல் தம் சுதந்திரத்தை உபயோகிக்கக் கூடியவர்களாக இருந்தார்கள். இது நிஜம் என்றே வரலாறு காட்டுகின்றது. இறை தூதர்கள் - நபிமார்கள் -, இறை தூதரல்லாத சீர்திருத்தவாதிகளை விடவும் ஜெயசீலர்களாக இருந்துள்ளார்கள்.

சீர்திருத்தவாதிகள் தமது நூல்களில் சிறந்த மானுட கொள்கைகளையும், சுலோகங்களையும் கூறியிருந்த போதிலும் தமது சமூகங்களை மாற்றி விடவில்லை. ஒரு நாகரீகத்தையும் கட்டியெழுப்பவில்லை. இறை தூதர்களே வரலாறுகளையும், சமூகங்களையும், நாகரீகங்களையும் கட்டியெழுப்பியுள்ளனர். பாஷிஸவாதிகளும், கர்த்தா - வணக்கவாளிகளும் கூறுவது போல் அவர்கள் தெய்வீக சட்டங்களை ஏற்றுக் கொண்டிருப்பதால் ''புதிய புதிய நியதிகளை உருவாக்கவில்லை.'' மாறாக அவர்கள் அல்லாஹ்வின் நியதிகளையே சமுதாயத்திலும், இயற்கையிலும் தமது நபித்துவப் பணியின் மூலம் கண்டுள்ளார்கள். தமது மனோசக்தியினூடாக இந் நியதிகளைப் பின்பற்றி அவர்கள் தம் இலக்கையும், பணியையும் நிறைவேற்றினார்கள்.

தற்செயல் தேற்றத்திற்கு, தத்துவ ரீதியான கருத்து எதுவும் இஸ்லாத்தில் கிடையாது. ஏனெனில் எல்லா விடயங்களிலும் அல்லாஹ்வே நேரடியாகவும், தொடர்ச்சியாகவும் தலையிடுகின்றான். தற்செயல் வாதத்திற்கு தர்க்க ரீதியாக வழியோ இறுதி இலக்கோ கிடையாது. சமூகத்திலோ இயற்கையிலோ, அதனால் எதனையும் தோற்றுவிக்க முடியாது.

தற்செயல் வாதத்தில் ஒரு வகை இருக்கின்றது; அதனை அதன் குறித்த கருத்தில் நாம் நோக்குவோமாயின் அது மனிதப் பண்பியலின் தலைவிதியில் பங்களிப்பு செய்வதை உணரலாம். உதாரணமாக, மங்கோலியாவின் செங்கிஸ்கான் தற்கால சமூக நியதிகளின் ஊடாகவே அதிகாரம் பெற்றுள்ளார். அவர் ஒரு பாரிய படையினை அமைத்தார். செங்கிஸ்கானின்

சரான் மீதான வெற்றி ஒரு போதுமே இடம் பெற்றிருக்கக் கூடாத ஒரு தற்செயலேயாகும். இவ்வாறாக இடம்பெற்ற சில தற்செயல்கள் சில சமுதாயங்களைப் பாதித்திருக்கலாம்.

இதுவரை நாம் பார்த்தவற்றிலிருந்து சமூகங்களின் தலைவிதியை பிரசித்தி பெற்றவர்கள், தற்செயல், நியதிகள், வெகுஜனம் என்கின்ற நான்கு காரணிகள் பாதிக்கின்றன. ஆனால் இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் நியதிகள், வெகுஜனம் என்னும் இரண்டுமே சக்தி மிக்கவை. ஏனெனில் வெகுஜனம் என்பது மக்கட் தொகுதியின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றது; நியதி என்பது சமூகத்தில் இருப்புக் கொண்டிருக்கும் விஞ்ஞானபூர்வமான சட்டங்களைக் குறிக்கின்றது.

சமூகத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இக் காரணிகளின் விகிதாசாரமானது அச் சமூகத்தின் நிபந்தனையில் தங்கியுள்ளது. ஒரு சமூகத்தில் வெகுஜனம் எனப் பொருள்படும் மானுட வர்க்கமும், அதிகளவில் முன்னேற்றகரமான மக்களும் இருப்பார்களேயாயின் அவர்கள் கட்டுப்பாடு, கலாச்சாரம் என்பவற்றில் ஓர் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்து விட்டார்கள் என்றாகும். மேலும் அங்கு பிரசித்தி பெற்றவர்களின் பங்களிப்பு என்பது குறைவாகவே காணப்படும்.

எப்படியாயினும், இவ்வாறான ஒரு நாகரீக நிலையை அடையாத – ஓர் இனம் அல்லது ஒரு குடும்பம் போன்ற – ஒரு சமூகத்தில் ஒரு தலைவர் அல்லது ஒரு பிரசித்தி பெற்றவர் சக்தி மிக்கவராக இருக்கலாம். எனவே, முன்னேற்றத்தில் அல்லது பின்னடைவில் சமூகத்தின் ஒவ்வொரு வித்தியாசமான நிலைகளிலும் மேற்குறிப்பிட்ட நான்கு காரணிகளில் ஒன்று ஏனைய மூன்றுடனும் ஒப்பீட்டு ரீதியில் சக்தி மிக்கதாக இருக்கும்.

இஸ்லாத்தில் நாயகம் (ஸல்) அவர்களின் ஆளுமையானது, எதிர்கால நாகரீகத்தின் மாற்றம், மாறுதல் என்பவற்றிலும் அது போன்றே சரித்திரத்தின் போக்கின் மாற்றத்திலும் ஓர் அடிப்படையான பங்களிப்பைச் செய்திருக்கின்றது. ஏனெனில் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குறித்த புவியியல் பிரதேசத்திலேயே (அராபிய தீபகற்பம்) தோன்றினார்கள். அப் பிரதேசத்தின் நாகரீகம் அதன் புவியியல் தன்மைக்கு ஏற்றவாறே இருந்தது. மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டதாக இருப்பினும் அரேபியா ஒரு வரண்ட பாலைவனமாகவே இருக்கின்றது.

அங்கு நீர் இல்லை. அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் உயர் வான நாகரீகம் அப்போது ஓங்கியிருந்தது. வடக்கே கிரேக்க மற்றும் கிழக்கு ரோம நாகரீகமும், தெற்கே ஈரானிய நாகரீகமும், வட கிழக்கே ஹிப்ரு நாகரீகமும் இருந்தன. மூஸா (அலை), ஈஸா (அலை), ஸொரொஸ்டர் போன்றவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட வேதங்களும், அது போல் ஆரிய (Semetic) நாகரீகங்களும் அதனைச் சூழ்ந்திருந்தன. நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் கூட இப்படியான நாகரீகங்களிற் சில அரேபியாவைச் சூழ்ந்திருந்தன. ஆனல் அரேபியாவுக்கே உரித்தான புவியியல் தன்மைகள் அவற்றை அரேபியாவுக்குள் நுழைய அனுமதிக்கவில்லை. இவற்றுள் ஒரு நாகரீகத்திற்காவது தனது அடையாளச் சின்னம் ஒன்றைத்தானும் அரேபியாவில் ஸ்தாபிக்க முடியாமலே போய்விட்டது.

சமூகவியலாளர்களின் கருத்துக்களின் படி இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களே தமது சமூக மாற்றம், மாறுதல்கள் என்பவற்றின் பிரதான காரணியாகும். அரேபிய தீபகற்பத்தில் கி. பி. 700ல் ஒரு தற்செயல் அலை இருந்தமையை வரலாற்று ஆசிரியன் ஒருவன் காண்கின்ருன். அது தன் சுற்றுடலை அப்படியே கரைத்து விட்டது. அது ஓர் உயர்ந்த நாகரீகத்தையும், சமூகத்தையும் அமைத்து விட்டது. அன்றைய அரேபியாவில் ஒருவித கலாசார, நாகரீக வெறுமையே இருந்தது. அன்றைய மக்கள் மிகவும் கஷ்டமான சூழ்நிலைகளிலேயே வாழ்ந்தனர். இப்படியான ஒரு நாட்டில் மானுட வர்க்கத்தின் சரித்திரத்திலேயே இடம் பெற்றிராத மிகப்பெரிய சிந்தனைகளின், மாற்றங்களின், மாறுதல்களின் அலை ஒன்று பொங்கிப் பிரவாகித்தது. அதுவே இஸ்லாம் என்பது. இன்றைய சரித்திரவியலாளர்கள் இந் நிகழ்விற்கு அப்துல்லாவின் மகனை முஹம்மத் (ஸல்) எனும் மனிதரையே காரணப்படுத்த வேண்டும். நாயகம் (ஸல்) அவர்களின் ஆளுமையானது, விசேஷமானதும், மாறுபட்டதுமான தன்மையைக் கொண்டது.

பொதுவாகக் கூறுமிடத்து மானுடர்களை உருவாக்குவதில் ஐந்து காரணிகள் உதவுகின்றன.

முதலாவது – மனிதப் பண்பியலின் ஆத்மிக பரிணமத்தையும், கட்டமைப்பையும் உருவாக்கும் தாய். யேசு சமூகம் ''உங்கள் குழந்தையை ஒரு வயதாகும் வரை எம்மிடம் ஒப்படையுங்கள். அதன்பின் அக் குழந்தை எங்கு சென்ருலும் தன்

வாழ்க்கையின் இறுதி வரை யேசு சமூகத்தைச் சார்ந்ததாகவே இருக்கும்'' என்று கூறுகின்றது. ஒரு தாய் மானுடத்தின் மனோ நிலையை வளர்க்கின்றாள்; ஆழமான நுட்பம், சாமர்த்தியம், உணர்வு என்பவற்றைத் தருகின்றாள். வளரும் குழந்தையின் முதற் பாடமாக அவளது விசேட பயிற்சிகள் அமைகின்றன.

இரண்டாவது காரணி தந்தையாகும். ஒரு தந்தையானவர் குழந்தையின் மனோநிலையின் ஏனைய பரிமாணங்களைக் கட்டியெழுப்புகின்றார்.

மூன்றாவது காரணி, மானுடரின் தெளிவான பரிமாணங்களையும், அமைப்பையும் கட்டியெழுப்புகின்ற பாடசாலையாகும்.

நான்காவது காரணி சமூக சூழலாகும். சூழல் காரணி சக்தி மிக்கது. இதனால் அது மானுடரில் அதிக தாக்கம் செலுத்துகின்றது. உதாரணமாக, சூழல் தாக்கமானது கிராமத்தில் வசிக்கும் ஒருவருக்கும் நகரில் வசிக்கும் ஒருவருக்கும் இடையில் வேறுபடுகின்றது.

ஐந்தாவது காரணி நாட்டின் பொதுக் கலாச்சாரம் அல்லது உலகின் பொதுக் கலாச்சாரம்.

எனவே, இவ் ஐந்து வார்ப்பு அச்சுகள் அல்லது பரிமாணங்களை மானுடத்தின் மனோநிலை ஊற்றப்பட்டு வடிக்கப்படுவதற்கான திட்டத்தினை செய்கின்றன.

மானுட உணர்வுக்கு வழங்கப்படும் கல்வியானது குறித்த இலக்குகள் மீதான விசேடமான தோற்றத்தை வழங்குகின்றது; ஏனெனில் ஒருவர் கல்வியறிவைப் பெறுமல் விடின் அவர் சமூகத்திற்கும், எம்முடைய இலக்கிற்கும் பயனற்றவர் ஆகின்றார். ஒருவருக்கு சரியான நிலைப்பாட்டினை நாம் வழங்குவோமாயின் அவர் அதனுடனேயே வளர்ந்து சமூகத்திற்குப் பிரயோசனமுடையவராகின்றார்.

வரலாற்று மாற்றம், மாறுதல்களுக்குக் காரணமாயிருந்த அல்லது பிரசித்தி பெற்றவராயிருந்த இஸ்லாத்தின் தூதர் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் மேற்குறிப்பிடப்பட்ட எக் காரணிகளுமே செல்வாக்குக் கொண்டிருக்கவில்லை. உண்மையில் இதன் பொருள் சாதாரணமாக ஒருவருக்கு அவருடைய காலத்திலும், சூழலாலும் கொடுக்கப்பட்டவை போல அவர் மீது

எதுவித தோற்றமும் திணிக்கப்படவுமில்லை; செய்கையான ஒழுக்க அமைப்பு எதுவும் கொடுக்கப்படவுமில்லை.

அவர்கள் எல்லா வகையான உருவ வணக்கங்களையும் தகர்த்தெறியவே அனுப்பப்பட்டார்கள். அன்றியும் அவர்கள் இவை மீது சார்ந்து வளர்ந்திருப்பின் தமது இறைபணியினை நிறைவேற்றிருக்கவே முடியாது. உதாரணமாக கிரேக்கர்களின் வார்ப்பு அச்சில் ஒரு வைத்தியராக, அல்லது ஈரானியரின் வார்ப்பு அச்சில் ஒரு தத்துவஞானியாக, அல்லது அக்காலத்தின் ஏனைய வார்ப்பு அச்சுக்களில் ஒரு கணித மேதையாக இருந்திருப்பின் இது சாத்தியமானதாக இருந்திருக்கும். ஆயினும், அவர்கள் கலாச்சார, நாகரீக வெறுமை கொண்ட ஒரு சூழலில் தமது இறைபணியை நிலைநாட்டவே அனுப்பப்பட்டார்களே அன்றி இவ்வாறான வார்ப்பு அச்சுகளை ஏற்றுக் கொள்வதற்கல்ல.

இதனால் தான் போலும் நாயகம் (ஸல்) அவர்கள் முதலில் தமது கண்களைத் திறந்ததுமே தம்மைப் பாலைவனத்திற்கு அப்பால் அழைத்துச் செல்ல வேண்டிய தந்தையாரைக் காணவில்லை. அக்கால அரபிகளிடம் ஒரு வழக்கம் இருந்தது. அதாவது பிள்ளை பிறந்து அது இரண்டு வயதாகும் வரை அதனைப் பாலைவனத்திற்கு அப்பால் கூட்டிச் சென்று பாலூட்ட வைத்து பின்னர் நகருக்குக் கொண்டு வந்து தாயின் அரவணைப்பில் வளர்க்கச் செய்வது.

ஆனால் முஹம்மது (ஸல்) அவர்கள் இதற்கு நேர்மாறான அனுபவங்களையே பெற்றார்கள். குறித்த வயதில் மக்காவிற்குக் கொண்டு வரப்பட்டவுடனேயே மீண்டும் பாலைவனத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டார்கள். ஐந்து வயதாகும் வரை அங்கேயே வளர்ந்தார்கள் அவர்களின் தாயார் இக்காலத்தில் காலமாகி விட்டார்கள்.

தலைவிதி காரணமாக தன் நகரத்தை விட்டும் பாலைவனத்திற்கு அனுப்பப்பட்ட இந்த இடையரின் ஆத்மாவின் மீது சுயாதீனமாகப் பிரவாகித்துக் கொண்டிருந்த அந் நகரின் சூழல் எதுவித பொருத்தமான அல்லது சாதகமான தடயங்களைப் பதிக்கவேயில்லை. ஏனெனில் அவர்கள் மீது சமூகத்தின் ஆத்மா எதுவித செல்வாக்கும் செலுத்தவில்லை. அவர்கள் பொதுக் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருந்த ஒரு சமூகத்திலேயே

வளர்ந்தார்கள். அவர்கள் உம்மியாக விருந்தார்கள். எனவே பாடசாலையும் அதன் வார்ப்பு அச்சும் அவர் மீது திணிக்கப் பட்டிருக்கவில்லை.

அக்காலத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டதும், மக்களை அவற் றிற்கமைய சரிப்படுத்தியதுமான அனைத்து சிந்தனைப் பிரிவுகளி லிருந்தும் விடுபட்டு தமது உயர்ந்த தூதினை நிலைப்படுத்திய மையானது மிகப் பெரியதோர் ஆளுமை யுத்தமாகும். இது இடம் பெற்ற அந்த மனிதர் அனைத்து நெருப்பு வணங்கும் கோயில்களை தகர்த்தெறியவும், பழைய கல்விக் கூடங்களை மூடி விடவும், அந்த இடங்களில் பள்ளிவாசல்களைக் கட்டவும், இன, சுதேசிய, பிரதேச வார்ப்பு அச்சுக்கள் அனைத்தையும் இல்லா மல் பண்ணவுமே, அவரிடம் அவர் பிறப்பதற்கு முன்பிருந்த எந்தவித வார்ப்பு அச்சுமே அவர் மீது எதுவித பாதிப்புகளையும் செய்யவில்லை.

அவர்களது தாயார் அவர்களிலிருந்து வெகு தூரத்தில் இருந்ததால், தாயின் அன்போ, பராமரிப்போ அவரின் ஆத்மா மீது செல்வாக்குச் செலுத்தவில்லை. அவர் ஒரு வரண்ட தீப கற்பத்தில் பிறந்தவர். அது பொதுக் கலாச்சாரத்திற்கு வெகு தொலைவில் இருந்தது. எனவே அவரது ஆத்மா அக்காலத்து கலாச்சாரம், நாகரீகம், விசுவாசம் என்பவற்றை பெற்றிருக்க வில்லை. அவருடைய ஆத்மா, இந்த வழக்கமற்ற பணியினை நிலைநாட்ட பொறுமையுடன் இவற்றைத் தாங்க வேண்டியிருந் தது. மாறாக சாதாரண வார்ப்பு அச்சுக்களின் எந்த வடிவத் தையும் அது பெற்றுக் கொள்ளவில்லை.

சரித்திரத்தில் வேறொன்றுடனும் ஒப்பிட முடியாத இந் நிகழ்ச்சிக்கான பங்களிப்பை இப் பிரசித்தி பெற்ற மனிதர் செய்வதற்கான மிகப் பெரிய சாதக நிலை இந்தத் தடையே யாகும்.



**ஷஹீத் டொக்டர் அலி ஷரிஅத்தி**

*( 1933 — 1977 )*

தத்துவ ஞானி; இஸ்லாமியப்
புரட்சியின் சிந்தனையாளர்.

புரட்சிகர கலாசார வரைஞர்.

ஈரானின் பாரம்பரிய கிராமமொன்றான மாஸினானில் பிறந்தவர்.

கொடுங்கோலிற்கெதிரான போராட்டச் சூழலில் வளர்ந்தவர்.

பொலிஸாரினால் பல முறை சிறையிலடைக்கப்பட்டு சித்திரவதைக்குள்ளானவர்.

ஆயிரக்கணக்கான தியாகமிக்க ஆண், பெண் மாணவர்களின் ஆசிரியர்.

மானுடவியலின் எதிரிகளினால்
ஷஹீதாக்கப்பட்டவர்.

**ISLAMIC STUDY CENTRE**
**COLOMBO - SRI LANKA**